நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய, மாத இதழ்)



எட்டவொண் ணாத கற்பகப் பிள்ளையார்
இன்னமு தக்குடம் துதிக்கையில் ஏந்தி
எட்டு வடிவுடன் காட்சி யளிக்கிறார்
ஏத்தி வழிபாட் டின்புறு வோமே.

செப்டம்பர் 1989

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8

ஒலி 8

சுக்ல
ஆவணி

செப்டம்பர்
1989

முன்னவனே! யானை முகத்தவனே! முத்திநலம்
சொன்னவனே! தூய்மெய்ச் சுகத்தவனே!—மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையஞ் சேகரனே!
தற்பரனே! நின்தாள் சரண்.

— அருட்பிரகாச வள்ளற் பெருமான்.

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்


துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00

ஆண்டுச் சந்தா ரூ. 24-00



பொன். புதுப்பட்டியில் மகேஸ்வர பூஜை

பொன். புதுப்பட்டி மலாயா ஊரணிக் கரையில் வீற்றிருக்கும் சுப்பையா கோயிலின் மஹேஸ்வர பூஜை 11-8-89 வெள்ளியன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பூஜையன்று பகலில் சுமார் 9000 க்கு மேற்பட்ட மக்களுக்கு விருந்து நடைபெற்றது. அடுத்த நாள் 12-8-89 நகர விருந்தும் நடைபெற்றது. மேற்படி விருந்தினை வலையபட்டி நகரத்தார்கள் மிகவும் சிறப்பாகப் பொறுப்பேற்று நடத்திக் கொடுத்தார்கள். புதுப்பட்டி நகரத்தார்கள் மேற்படி பூஜையின் பொறுப்புகளைச் செவ்வனே ஏற்றுச் செய்தார்கள். ஏலமும் நடைபெற்றது. மேற்படி பூஜை 12 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

- கலைமகள் நடராஜன் செட்டியார்
பொன். புதுப்பட்டி

தமிழின் மகிமை!

கல்கத்தாவில் ஒரு போலீசுக்காரர் கூட்டத்தில் ஒருவரை மிதித்து விடுகிறார்.

மிதிபட்டவர் ''நாசமாகப் போக'' என்று திட்டுகிறார்.

''சார்! நீங்க தமிழ்நாடா?''

''ஆமாம்யா. நான் மாயவரம்''

தமிழ் அங்கு வலியை மறக்கச் செய்து விடுகிறது; கோபத்தைப் போக்கிவிடுகிறது.

— சொ. சொ. மீ. சுந்தரம்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில்)

பட்டினத்தடிகள் திருவிழாவில் ஆறுருஞ உதிர்த்த முத்துக்கள்!

ஃ அந்தக்காலத்தில் பிள்ளைகள் 'ஆத்தா' என்றன, பின்னுல் 'அம்மா' என்றன. இப்போது ''மம்மி-உனக்குப் புத்தி கொஞ்சம் கம்மி'' என்கின்றன.

ஃ நம்முடைய பெண்கள் இப்போது நன்ருகப் படிக்கிருர்கள். மாப்பிள்ளை தேடுவது சிரமம் என்பதால் பலர் நன்கு படிக்கும் பெண்களை அதிகம் படிக்கவைக்கப் பயப்படுகிருர்கள். அதுவும் உண்மைதான்.

ஃ குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டவேண்டும். அப்போது தான் அவை நம்முடன் பாசமாக இருக்கும்.

ஃ இறைவனுல் சோதனை செய்யப்பட்டவர்கள் நகரத்தார்கள்.


ஃ நம் பெண்கள் சொல்லாக்கம் செய்வதில் கெட்டிக்காரர்கள். பிரஸ் பட்டன் என்பதை அமுக்குப் பித்தான் என்றும் பௌடரைப் புட்டா மாவு என்றும் கார் நிற்குமிடத்தைக் காரடி என்றும் தேர் நிற்குமிடத்தைத் தேரடி என்றும் கூறுகிருர்கள்.

ஃ அந்தக்காலத்தில் ஆத்தா அனுமதித்தால்தான் பெண்டாட்டியுடன் பேசலாம்; ஆனுல் இந்தக் காலத்தில் பெண்டாட்டி அனுமதித்தால்தான் ஆத்தாவுடன் பேசலாம்.

ஃ அந்தக் காலத்தில் மாமியார்-மருமகள் சண்டை இருந்தது. இப்போது அதெல்லாம் இல்லை. ஏனென்ருல் திருமணத்திற்கு வரும்போதே வீட்டைப் பார்த்து பால் காய்ச்சிக் குடித்து விட்டுத் தான் இப்போது பையன்கள் வருகிருர்கள்.

ஃ அரசு குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறது. ஆனுல் அந்தக் காலத்திலேயே நம்மவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொண்டார்கள்.

— பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார்



மணிவிழாக் கண்ட நடராஜபுரம் திரு. முரு. ராம. ராம. முருகப்ப செட்டியார் - திருமதி மீனாட்சி ஆச்சி.

நடராஜபுரத்தில் மணி விழா

தொழிலதிபர் நடராஜபுரம் முரு. ராம. ராம. முருகப்ப செட்டியார் அவர்களுக்கும் திருமதி மீனாட்சி ஆச்சி அவர்களுக்கும் நடராஜபுரத்தில் 21-8-89 திங்கட்கிழமையன்று 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழாச் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழாவில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், ஆலை அதிபர்கள், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கணக்காய்வாளர்கள் நண்பர்கள் நகரத்தார்கள், நாட்டார்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்த நாட்டார்கள் மேள தாளங்களுடன் சீர் கொண்டு வந்து சிறப்புச் செய்தனர்.

மணிவிழாவையொட்டி முதல் நாள் 20-8-89 அன்று நாவுக்கரசி திருமதி இளம்பிறை மணிமாறன் ''சீதா கல்யாணம்'' பற்றி உரை நிகழ்த்தினர். இரவு சின்னமனூர் சகோதரிகள் சிஆர். ராஜலெட்சுமி சிஆர். ஜெயலெட்சுமி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

21-8-89 அன்று காலையில் இராமநாதபுரம் முருகனருள் எஸ்பி. சிவகுமார் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. காலை 10-30 மணி அளவில் ''குடும்பத்தின் உயர்வுக்குப் பெரிதும் காரணம் கணவனா, மனைவியா?'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. நடுவர் 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன்' மனைவியே' என்று தீர்ப்பு வழங்கினர்.

மணி விழாவிற்கு வருகை தந்தவர்களை திருவாளர்கள் இராம. இராமநாதன் செட்டியார், முரு. உடையப்பன், முரு. இராமநாதன், முரு. சண்முகம் ஆகியோர் வரவேற்றனர்.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்


வி.என்.சிதம்பரம்



—44—

அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் முப்பதாயிரம் இந்தியக் குடும்பங்கள் இருக்கின்றன. அதில் சுமார் பதினைந்தாயிரம் தென்னிந்தியக் குடும்பங்களும், பத்து நகரத்தார் குடும்பங்களும் அடங்கும். இந்தியர்கள் அனைவரும் கூடி ஹூஸ்டனில் மீனாட்சி அம்மன் கோவிலைக் கட்ட வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அந்தத் திருப்பணிக் குழுவிற்குத் தலைவராக தியாகராஜன் என்ற தமிழரையும் செயலாளராக நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த சொ. கண்ணப்ப செட்டியாரையும் மற்றும் பல வகுப்பினரைக் குழுவில் ஏக மனதாகத் தேர்ந்தெடுத்தார்கள். திருப்பணி முடிந்து குட நீராட்டு நடைபெறும் வரையில் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களை மாற்றுவதில்லையென்றும், குட நீராட்டு நடந்த பிறகு தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களை ஆண்டு தோறும் தேர்ந்தெடுப்பதென்றும் முடிவு செய்தார்கள். கோவிலைக் கட்டுவதற்கு தமிழகத்தைச் சேர்ந்த கணபதி ஸ்தபதி, முத்தையா ஸ்தபதி சகோதரர்களை அழைத்து வேலையைத் துவங்கி 1982 ஜூன் மாதம் குட நீராட்டிற்கு நாள்க் குறித்தார்கள். நகரத்தார்களும் வேலை நேரம் போக மற்ற நேரத்தை திருப்பணி வேலையிலேயே கவனம் செலுத்தினார்கள். குறிப்பாக செயலாளர் சொ. கண்ணப்ப செட்டியார் அவர்கள் நேரம் காலம் பார்க்காமல் உழைத்தார்கள், அதன் பலனாக மீனாட்சி அம்மன் கோவில் அழகாக உருவாகியது. குட நீராட்டுக்கு நாள்க் குறித்ததும் குட நீராட்டை நடத்தி வைப்பதற்கும், தொடர்ந்து அங்கு ஒரு ஆண்டுக் காலம் அர்ச்சகராகப் பணி புரிவதற்கும் ஒரு அர்ச்சகரை அனுப்பி வைக்கும்படி தலைவரும், செயலாளரும் ஹூஸ்டனிலிருந்து தொலைபேசி மூலம் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் இங்கு அறங்காவலர் கூட்டத்தைக் கூட்டி மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் தலைமைச் சிவாச்சாரியாரான தங்கப் பட்டரை அனுப்பி வைப்பதென முடிவு செய்தோம்.

அமெரிக்காவில் பிட்ஸ்பர்க்கில் உள்ள வெங்கடாஜலபதி கோவிலுக்கு, திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலிலிருந்து தேவையானவைகளை எல்லாம் செய்து கொடுத்தார்கள். ஆகவே பிட்ஸ்பர்க் கோவிலில், திருப்பதி கோவிலின் ஆலோசனைகளைக் கேட்டுத்தான் நடத்துகிறார்கள். அதே போல மூலவிக்ரகம், உற்சவர் முதலியவைகளை மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்திலிருந்து செய்து தர



படத்தில் திரு. ஏஎல். பெரியகருப்பன், திரு. தியாகராஜன் (தலைவர், ஹூஸ்டன் மீனாட்சி அம்மன் கோயில்) திரு. ராஜரத்ன பட்டர், திரு. வி. என். சிடி. திரு. வயிரவன் சுப்பிரமணியம் டாக்டர் திரு. எம் ஏ. சி. எஸ். ராஜேந்திரன், திருமதி ராஜேந்திரன் உள்ளனர்.

வேண்டுமென்று ஹூஸ்டன் மீனாட்சி ஆலயத்திலிருந்து கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் அறங்காவலர் கூட்டத்தில் 'செய்து கொடுக்கலாம்' என்று ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியும் அதற்கு அரசு இசைவு தராததால் அதன்படி அனுப்ப முடியவில்லை. அப்படி நாம் சில காரியங்களைச் செய்திருந்தால் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் ஆலோசனைகளைக் கேட்டுத்தான் ஹூஸ்டன் மீனாட்சி அம்மன் கோவிலை நடத்தி இருப்பார்கள். ஹூஸ்டன் மீனாட்சி அம்மன் கோவில் குடநீராட்டு நடந்தவுடன் அம்மனுக்குச் சாத்துவதற்கு ஒரு பட்டுப்புடவையையும், ஒரு அடி உயரத்தில் ஒரு மீனாட்சி அம்மன் சிலையையும் கொடுத்து தங்கப் பட்டரை ஹூஸ்டன் செல்ல வழியனுப்பி வைத்தோம்.

தங்கப்பட்டர் பட்டு புடவையையும், மீனாட்சி சிலையையும் ஒரு கைப் பையில் வைத்து, அந்தப் பையை மடியில் வைத்துக் கொண்டு சென்னையில் விமானம் ஏறினர். விமானம் பம்பாயில் இறங்கியபோது விபத்துக்குள்ளாகி அதில் சுமார் 20 பேர் உயிரிழந்தனர். விமானத்தில் தங்கபட்டருக்குப் பக்கத்தில் இருந்தவரும் உயிரிழந்தார். குழந்தை வடிவத்தில் மீனாட்சி அருள் பாலித்ததாக பல வரலாறுகள் சொல்லுகின்றன. ஒரு குழந்தையை மடியில் வைத்திருப்பதுபோல மீனாட்சியை கைப்பையில் வைத்து தன் மடியில் வைத்திருந்த காரணத்தினல், ஒரு கீரல் கூட இல்லாமல் அன்னை மீனாட்சியின் அருளினல் தங்கபட்டர் உயிர் பிழைத்தார். அத்துடன் விபத்துக்குள்ளான விமானத்திலிருந்து இறங்கி

வருந்துகிறோம்

என்னுடைய அமெரிக்கப் பயணக் கட்டுரையில் கடியாபட்டி திரு. பி. கு. நா. சக்தி செட்டியார் பேரனும், திரு. ரத்தினம் செட்டியார் மகனுமான குமார் அவர்களும், அவர்கள் மனைவி திருமதி உலகம்மையும் சான்பிரான்சிஸ்கோவில் என்னை உபசரித்தது பற்றியும், அதேபோல தேவகோட்டை உ. ராம. மெ. சுப. சேவு. மெ. சொக்கையா செட்டியார் அவர்கள் மகன் திரு. சேதுவும் அவர் மனைவி திருமதி சரோஜாவும் சிக்காகோவில் விருந்து அளித்து உபசரித்தது பற்றியும் முன் இதழ்களில் விவரமாக எழுதியிருந்தேன். குமார் அவர்கள் மகன் ரத்தினமும், சேது அவர்கள் மகள் மங்கையும் விடுமுறைக்காக அமெரிக்காவிலிருந்து சென்னை வந்து பெங்களூருக்குக் காரில் சென்று திரும்பும்போது 7—8—89 அன்று இரவு 9 மணியளவில் ஸ்ரீ பெரும்புதூர் அருகில் நிகழ்ந்த கார்-பஸ் விபத்தில் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள்.

பெற்றோர்கள் அமெரிக்காவிலிருந்து சென்னை வந்து திருவொற்றியூரில் குழந்தைகளை அடக்கம் செய்தார்கள். குழந்தைகளை இழந்து துடிக்கும் பெற்றோர்களுக்கு எபபடி ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. குழந்தைகள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

— வி. என். சிதம்பரம்
ஆசிரியர்

பம்பாய் விமான நிலையத்திலிருந்து தான் பத்திரமாக இருப்பதாக தொலைபேசி மூலம் மதுரை -க்கு எனக்குத் தகவல் சொல்லிவிட்டு, அடுத்த விமானத்தில் அமெரிக்கா சென்றார். ஹூஸ்டனில் குடநீராட்டை மிகச் சீரும் சிறப்புமாக நடத்திவிட்டு, இங்கிருந்து கொண்டுபோன பட்டுப்புடவையை மீனாட்சி அம்மனுக்கு அணிவித்து, அங்கிருந்து எல்லாம் நல்லபடியாக நடந்ததாக மீண்டும் தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் தலைமைச் சிவாச்சாரியாராக அங்கு பணியாற்றிவிட்டு தங்கபட்டர் தாயகம் திரும்பினார். பிறகு அவருக்குப் பதில் அவரது சகோதரர் ராஜரத்தின பட்டரை மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்திலிருந்து அங்கு அனுப்பி வைத்தோம். டிரஸ்டிகள் மாறினாலும் தொடர்ந்து தங்கபட்டரும், ராஜரத்தின பட்டரும் மாறி மாறி ஹூஸ்டன் மீனாட்சி அம்மன் கோவிலில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

நகரத்தார்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் பர்மா, மலேயா, சிங்கப்பூர், இலங்கை, செய்கோன் முதலிய நாடுகளில் கோவில்களைக் கட்டி தெய்வப் பணி ஆற்றி வருகிறார்கள். அது

போல் அமெரிக்காவிலும் நம்ம வர்கள் ஆலயப்பணியில் ஈடுபட்டிருப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். முப்ப தாயிரம் இந்தியக் குடும்பங்கள் இருக்கின்றபோது திரு. சொ. கண்ணப்ப செட்டியாரைச் செயலாளராகக் கொண்டு ஒரு கோவில் உருவாகியிருக்கிறது என்று சொன்னால் அது கண்ணப்ப செட்டியாருக்கு மட்டுமின்றி நகரத்தார்களுக்கே பெருமையாகும். கண்ணப்ப செட்டியாரும் அடிக்கடி இந்தியாவிற்கு வரும்போது, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்து இங்கு எப்படி ஆலயப் பணிகள் நடைபெறுகிறது என்று தெரிந்து கொண்டு செல்வார்கள். நான் அவர்களைப் பலமுறை ஆலயத்தில் வரவேற்றிருக்கிறேன்.

(வளரும்)

வாழ்த்துகிறோம்!

திருமதி மாலா நடராஜன் அவர்கள் திருநெல்வேலி இன்னர் வீல் கிளப்பின் தலைவியாக 1989-90 ஆம் ஆண்டுக்கு ஏக மனதாகத் தேர்வு செய்யப் பெற்றிருக்



கிறார்கள். இவர்கள் திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் நிறுவனரும் முதல் தலைவருமான வலையபட்டி எஸ்எம். நடராஜன் செட்டியார் அவர்களின் அன்புத் துணைவியார் ஆவார்கள். நம்மினத்தவருக்கும் மற்றவர்களுக்கும் இயல்பாகவே தொண்டுகள் பல செய்து வரும் நடராஜன் செட்டியார் அவர்களைப் போலவே இவர்களும் தொண்டுகள் செய்வதில் ஆர்வமுடையவர்கள். இவர்களது தொண்டுகள் சிறக்க வாழ்த்துகிறோம்.

ஃ ஃ ஃ

திருமதி கமலா இராமசாமி அவர்கள் திருநெல்வேலி இன்னர் வீல் கிளப்பின் செயலாளராக 1989-90 ஆம் ஆண்டுக்கு ஏக மனதாகத் தேர்வு செய்யப்பெற்றிருக்கிறார்கள். திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் முதல் செயலாளராகத் தொண்டாற்றிய காரைக்குடி திரு. எஸ்பி.



இராமசாமி, இவர்களது கணவராவார்கள். இவர்களும் கணவர் வழி நின்று தொண்டுகள் பல செய்யவும் அது சிறப்புப் பெறவும் வாழ்த்துகிறோம்.

கல்லறையும் திருமணமும்!

கணவனை இழந்த ஒரு பெண், தன் கணவன் புதைக்கப்பட்ட கல்லறை அருகில் இருந்து கல்லறையை ஒரு விசிறி கொண்டு வீசிக் கொண்டிருக்கிறாள்.

அதைப் பார்த்த ஒரு பாதிரியார் அவள் அருகே வந்து ''அம்மா நீ விசிறி கொண்டு கல்லறையை வீசுகிறாயே, அது எதற்காக?'' என்று கேட்கிறார்.

''கல்லறை காயுமுன் நீ இன்னொரு திருமணம் செய்து கொள்ளாதே!' என்று என் கணவர் சொல்லிச் சென்றார். அதனால் தான் நான் இவ்வாறு செய்கிறேன்'' என்றாள்.

எனவே உரையாடல்களை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

— முனைவர் பழ. முத்தப்பன்

(காவிரிப்பூம்பட்டினத்தில் ''வீடணன் தமையனைப் பிரிந்து இராமனைச் சேர்ந்தது குற்றம்'' என்ற தலைப்பில் 12-8-89 அன்று நடைபெற்ற வழக்காடு மன்றத்தில் கூறியது.)

''புண்ணிய காரியங்களைச் செய்யுங்கள்''

''வீடுவரை உறவு; வீதிவரை மனைவி; காடுவரை பிள்ளை; கடைசி வரை யாரோ?'' என, கவியரசு கண்ணதாசன் பாடியிருக்கிறார். பட்டினத்தடிகள் கூறியுள்ள கருத்து இது.

ஒருவர் இறந்து போய்விட்டால் உறவுக்காரர்கள் வீடு வரை வருவார்கள். மனைவி வீதி வரை வருவாள். பிள்ளை சுடு காடு வரை வந்து கொள்ளி வைத்துவிட்டுப் போய்விடும். இறந்தவருக்குப் பத்து வீடுகள் இருந்தால் அவை அவர் கூடச் செல்லாது. கார் இருந்தால் அதுவும் செல்லாது. பொன்னும் பொருளும் செல்லாது. ஆனால் அவர் செய்த புண்ணியங்கள் அவர் கூடச் செல்லும். எனவேதான் புண்ணிய காரியங்களைச் செய்ய வேண்டுமெனச் சொல்கிறார்கள். தர்மம் செய்ய விரும்புபவர்கள் நந்தவனங்களை ஏற்படுத்தலாம். பசு மடங்களை நிறுவலாம். பாடசாலைகளை ஏற்படுத்தலாம்.

— பழ. தெ. லெ. அருணாசலம் செட்டியார்

(பட்டினத்தடிகளின் 8 ஆம் திருநாளன்று கூறியது)

மாம்பழத்தின் கதி!

ஒருவன் தெரு ஓரமாக நடந்து சென்றான். அப்போது அவன் காலில் மலம் ஒட்டிக் கொண்டது. மனம் சங்கடப்பட்டு அதைத் தண்ணீர் விட்டுக் கழுவினான். அப்போது அந்த மலம் பேசியது: ''நேற்று எனக்கு மல்கோவா மாம்பழம் என்று பெயர். ஒரு பாவியோடு நான்கு மணி நேரம் உறவாடியதால் எனக்கு இந்த கதி ஏற்பட்டு விட்டது.''

— சொ. சொ. மீ. சுந்தரம்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில் பேசும் போது கூறியது.)

முனைவர் தமிழண்ணலுக்கு திரு. வி. க. விருது!

'தமிழ்த்தென்றல்' திரு வி. கல்யாண சுந்தரனாரின் 107 ஆவது பிறந்த தின விழா தமிழக அரசு சார்பில் சென்னை ராணி சீதை மன்றத்தில் 27-8-89 அன்று நடைபெற்றது. அப்போது மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தின் தமிழியல் துறைத் தலைவரும் ஆராய்ச்சித் துறைப் பேராசிரியருமான முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கு 1989ஆம் ஆண்டுக்கான திரு. வி. க. விருதினை தமிழ்க் முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் வழங்கினார்கள். அத்துடன் 10 ஆயிரம் ரூபாயையும் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

இவ்விழாவிற்கு தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். இவ்விழாவில் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க் குடிமகனும் கலந்து கொண்டு பேசினார்.

இருமொழிக் கல்வித் திட்டத்தைத் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை அமல் படுத்த வேண்டும் என முனைவர் தமிழண்ணல் அவர்கள் இவ்விழாவில் கேட்டுக் கொள்ள, "இருமொழிக் கல்வித் திட்டத்தை முழுமையான அளவில் நிறைவேற்ற, கல்வி அமைச்சருடன் கலந்து பேசி உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்" என தமிழக முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் பதிலளித்தார்கள்.

முன்னதாக தமிழக அரசு தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. அவ்வை நடராஜன் வரவேற்றார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு. கு. சிவஞானம் நன்றி கூறினார்.

முனைவர் தமிழண்ணல் அவர்களின் இயற்பெயர் இராம. பெரியகருப்பன் என்பதாகும். இவர்கள் நெற்குப்பையைச் சேர்ந்தவர்கள்.

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சேவைகள்

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சார்பாக 9-9-89 அன்று மதுரையில் உள்ள சில தொழிற்சாலைகளைப் பார்வையிட ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளதாகவும் அதில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர்கள் மதுரை நகர விடுதியில் ரூ. 2-00 செலுத்தித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் அச் சங்கத்தின் தலைவர், மற்றும் துணைத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கம் நம் இனப் பெண்களின் வேலை வாய்ப்பிற்கு ஒரு ஏற்பாடு செய்துள்ளது. அதன்படி மதுரை நகரில் உள்ள தொலைபேசிகளைச் சுத்தம் செய்யும் பணிக்குப் பெண்களை நியமிக்க உள்ளது. தொலைபேசி ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 3-00 கட்டணம் என்றும் மாதம் ஒன்றுக்கு நான்கு முறை அவர்கள் சுத்தம் செய்வார்கள் என்றும் தொலைபேசி உள்ள நகரத்தார்கள் ஆதரவு நல்கிட வேண்டுமென்றும் இளைஞர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

காசி யாத்திரை

தீபாவளி கங்கா ஸ்நான ஸ்பெஷல்

16 - 10 - 89 முதல் 3 - 11 - 89 வரை 19 நாட்கள்

சென்னை - டெல்லி - ஆக்ரா - மதுரா - பிருந்தாவனம் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி — கயா — புத்தகயா — அலகாபாத் (பிரயாகை) — அயோத்தியா — சென்னை.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து சுக்கில ஹூ புரட்டாசி மீ 30உ 16—10—89 புறப்படுகிறது

இரண்டாவது வகுப்பு III டயர் ரயில் கட்டணம்,
ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு, காலை டிபன் காபி,
பகல் சாப்பாடு, மாலை காபி, இரவு ஆகாரம் உள்பட

நபர் 1-க்கு ரூ. **1800/-**

விரைவில் நபர் 1-க்கு ரூ 750/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி டிக்கட் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

---

23 - 10 - 89 முதல் 3 - 11 - 89 வரை 12 நாட்கள்

சென்னை—காசி—கயா—புத்தகயா—அலகாபாத் (பிரயாகை)— அயோத்தியா — சென்னை.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து சுக்கில ஹூ ஐப்பசி மீ 7உ 23—10—89 புறப்படுகிறது

இரண்டாவது வகுப்பு III டயர் ரயில் கட்டணம்,
ஊர் சுற்றிப்பார்க்கும் சிலவு. சாப்பாடு உள்பட

நபர் 1-க்கு ரூ **1200/-**

விரைவில் நபர் 1-க்கு ரூ. 500/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி டிக்கட் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

அரசு வங்கி அலுவலர்களுக்கு LFC, LTC பெற சான்றிதழ் வழங்கப்படும்

தீபாவளியன்று காசியில் கங்கா ஸ்நானமும், காசிவிஸ்வநாதர், நங்க அன்னபூரணி, தங்க விசாலாட்சி, மிட்டாய்த் திருவிழாவும் பார்க்கத்தக்கவை.

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

ஸ்ரீமுருகன் டிராவல் ஏஜன்ஸி

9. வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1. 31168

உரிமையாளர் : S. PR. சுப்பிரமணியன்

காவிரிப்பூம்பட்டினத்தில் திருவிளக்குப் பூஜை

காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவின்போது 11-8-89 (வெள்ளி) மாலை 6-15 முதல் 7-15 வரை நகர விடுதியில் ஒன்பது நகரக் கோயில்களையும் சேர்ந்த 108 சுமங்கலிப் பெண்கள் பங்குகொண்ட திருவிளக்குப் பூஜை சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக நாதஸ்வரம் ஒலிக்க மேள தாளங்களுடன் பெண்கள் எல்லோரும் விடுதியிலிருந்து பல்லவனீச்சரக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து தீர்த்தம் வாங்கிக் கொண்டு வந்தார்கள். அதனைத் தொடர்ந்து வேந்தன்பட்டி திருமதி அழ. சேது ஆச்சி முதல் திருவிளக்கை ஏற்றி வைத்தார்கள்.

திருவிளக்குப் பூஜை முடிந்தபின் காளாஞ்சியுடன் பெண்கள் எல்லோரும் மீண்டும் கோயில் சென்று ஸ்ரீ விநாயகர், ஸ்ரீசுப்பிரமணியர், சுவாமி, அம்மன், பட்டினத்தார் ஆகிய தெய்வங்களை வழிபட்டு விடுதிதிரும்பினர். விடுதி முன்பு பட்டமங்கலம் திருமதி சௌந்தரம் ஆச்சி பாகனேரி திருமதி ச. கண்ணாத்தாள் ஆச்சி ஆகிய இருவரும் அவர்களை நீர் ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள். விடுதி வந்த அவர்கள் பட்டினத்தார் படம் முன்பு வணங்கினார்கள். இந்த நிகழ்ச்சியை ஒட்டி கோயிலில் தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்விக்கப் பெற்றிருந்தது.

வெள்ளையன் இருப்பு பெருமாள் கோயிலில் திருமஞ்சனம்

காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதிக்கு வெகு அருகில் வெள்ளையன் இருப்பு என்ற இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜநாராயணப் பெருமாள் கோவிலை 11-8-89 அன்று காலை பட்டினத்தடிகள் திருவிழாவிற்கு வருகை தந்த 4, 5 நகரத்தார்கள் பார்வையிட்டுத் தெரிசித்து வந்தனர். உடனடியாக அங்குள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனுய ராஜநாராயணப் பெருமாளுக்கு திருமஞ்சனம் (அபிடேகம்) செய்து பார்த்தால் என்ன என்ற எண்ணம் தோன்றவே இரண்டு மணி நேரத்தில் நம் நகரத்தார்களிடம் நிதி வசூல் செய்து திருமஞ்சனத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

அது போல் 12-8-89 சனிக்கிழமை காலை சுமார் 8-30 மணி அளவில் அங்குள்ள மூலவருக்கும் ஸ்ரீராஜநாயகி, பிள்ளையார் ஆகிய தெய்வங்களும் திருமஞ்சனம் செய்வித்து, தெரிசித்து மகிழ்ந்தனர். இதை ஒட்டி பொங்கல் பிரசாதமும் வழங்கப்பெற்றது.

திருமஞ்சன ஏற்பாட்டை நாட்டரசன்கோட்டை திரு. வீர சுப. லெ. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை திரு. எல். கருப்பன்செட்டி காரைக்குடி திரு. வெ ராம. அ. வெ. சொக்கலிங்கம் செட்டியார் ஆகிய மூவரும் ஆர்வத்துடன் செய்து உதவினர்.

பிள்ளையார்பட்டியில் ஏழு கூட்டுத் திருமணங்கள்!

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியில் சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள் 22ஆம் நாள் (7-9-89) வியாழக்கிழமையன்று காலை 9-00 மணிக்கு மேல் 10-30 மணிக்குள் பிள்ளையார்பட்டியில் ஏழு கூட்டுத் திருமணங்கள் நடைபெற உள்ளன.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ காவிரிப் பூம்பட்டினத்தில் இயற்பகை நாயனுர் திருவிழா சுக்கில ஆண்டு மார்கழி மாதம் 2, 3, 4 (17-12-89 to 19-12-89) ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கிறது.

ஃ 1924 முதல் 1940 வரை நகரத்தார்கள் செய்துள்ள கோயில் திருப்பணிகளை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெறுவதற்கு தாம் சிலருக்கு யோசனை கூறியுள்ளதாக திருவெண்காடு சுவேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயிலின் நிர்வாக அதிகாரி திரு. எம். சுந்தரராஜ் கூறினுர்.

ஃ பதிப்பாளர்கள் நகரத்தார் சமூகம் பற்றி முழுமையான விவரங்களுடன் ஒரு நூலை வெளியிட வேண்டும் என பட்டினத்தடிகள் திருவிழாவில் காரைக்குடி திரு. பழ. தெ லெ. அருணசலம் செட்டியார் கூறினுர்.

ஃ ''குமுதம்'' இதழின் ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணுமலை அவர்களின் புதல்வர் டாக்டர் திரு. ஜவஹர் பழநியப்பன் அமெரிக்காவில் Heart Specialist ஆகச் செயலாற்றி வருகிறுர்.

ஃ கீழச்சிவல்பட்டியைச் சேர்ந்த திரு. ஏஆர். சுகுமார் இ. ஆ ப. ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தின் இணை ஆட்சித் தலைவராகச் செயலாற்றி வருகிறுர்.

ஃ பூம்புகார் பத்தினிக் கோட்ட அறநிலை சார்பில் கண்ணகித் திருநாள் மேலையூர் பத்தினிக் கோட்டத்தில் 11 & 12-8-89 ஆகிய இரு தினங்கள் சிறப்பாக நிகழ்ந்தன.

ஃ மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் முன்னுள் முதல்வர் முனைவர் சுப. அண்ணுமலை அவர்களின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 3-10-89 அன்று பிள்ளையார்பட்டியில் நிகழ இருக்கிறது.

ஃ திருத்தணிப் பாதயாத்திரைக் குழுவின் தலைவர் சொக்கநாதபுரம் 'காசிஸ்ரீ' திரு. சுப. இராகவனின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 10-10-89 அன்று சென்னை பாலாஜி கல்யாண மண்டபத்தில் நிகழவிருக்கிறது. மணி விழாவையொட்டி 9-10-89 மாலை கவியரங்கமும் நிகழவிருக்கிறது.

ஃ கவிஞர் திரு. சோம சிவப்பிரகாசம் படைத்துள்ள ''வரும் நூற்றுண்டே வா'' என்கிற கவிதை நூலின் வெளியீட்டு விழா 12-8-89 அன்று சென்னை தென்னிந்திய வணிகக் கழகத்தில் சிறப்புற நடைபெற்றது.

ஃ புதுவயல் யெ மு. சொ. முத்தப்பன் நினைவு அறக்கட்டளை சார்பாக 22 & 23-8-89 ஆகிய இரு நாட்கள் புதுவயல் ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 'பொற்கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரம், சுந்தரர் திருமுறை பற்றிப் பேருரையாற்றினுர்.

ஃ சென்னை கம்பன் கழகத்தின் பதினைந்தாம் ஆண்டு விழா 11-8-89 முதல் 13-8-89 வரை

மூன்று தினங்கள் சென்னை ஏவி. எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஃ மேலச்சிவபுரி அ. சொ. சிவப்பிரகாசம் அவர்களைச் செயலாளராகக் கொண்ட எர்ணாகுளம் முத்தமிழ்ச் சங்கம் பல சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு சமய, இலக்கியச் சொற்பொழிவுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

ஃ எர்ணாகுளம் முத்தமிழ்ச் சங்கம் சார்பாக கேரள உயர் நீதிமன்ற நீதிபதி திரு. பி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 11-8-89 அன்று திரு. டி. வி. சுவாமிநாதன் ''கம்ப இராமாயணம்'' என்ற தலைப்பில் பேருரையாற்றினார்.

ஃ சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள் 22 ஆம் நாள் (7-9-89) காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயிலில் குடநீராட்டு விழா நடைபெற உள்ளது.

ஃ டாக்டர் ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்களின் 85 ஆவது பிறந்த தினம் நிறுவன அலுவலர்கள் மனமகிழ் மன்றத்தின் சார்பாக 5-8-1989 அன்று சென்னை ராணி சீதை மன்றத்தில் கொண்டாடப் பெற்றது. அவ்வமயம் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் நினைவு அறக்கட்டளையினரால் 1989ஆம் ஆண்டுக்கான ராஜா சர் முத்தையா செட்டியார் பிறந்த தினப் பரிசான ரூ. 50,000 ஒரு தமிழறிஞருக்கு வழங்கப் பெற்றது.

ஃ நெய்வேலி நகரத்தார் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் 11-8-89 வெள்ளியன்று நெய்வேலியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பதினைந்தாம் ஆண்டாக திருவிளக்கு வழிபாடும் அபிஷேக ஆராதனைகளும் ஏலமும் நடைபெற்றன.

ஃ திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் தலைமையில் சுமார் 15 பேர் 1990 பிப்ரவரியில் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு (வாரணாசி) பாதயாத்திரையாகச் சென்று வர இருக்கிறார்கள்.

ஃ அடுத்த ஆண்டு பல திருத்தொண்டர்கள் தேவகோட்டையிலிருந்து பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவிற்கு (காவிரிப் பூம்பட்டினத்திற்கு) பாதயாத்திரையாகச் சென்று வரலாம் என எண்ணியிருக்கிறார்கள்.

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலின் (குருநாதன் கோயில்) திருக்குட நன்னீராட்டு விழா 7-9-89 (ஆவணி மீ 22 உ) வியாழன் காலை 9 மணி முதல் 10 மணிக்குள் நடைபெற உள்ளது.

ஃ பொன். புதுப்பட்டி சுப்பையா கோவில் மகேஸ்வர பூஜையை ஒட்டி 10-8-89 அன்று பொன். புதுப்பட்டி மலேயா ஊரணி கீழ்கரையில் பாத்திரங்களாக வேடமிட்டு வாதாடும் ''விடுதலை யாருக்கு?'' என்ற நீதி மன்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

ஃ 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோயிலில் 29-8-89 முதல் 4-9-89 வரை ஏழு தினங்கள் இராமாயணம் பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்த இருக்கிறார்.

ஃ மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 2-9-89 முதல் 13-9-89 வரை ஆவணி மூலத் திருவிழா நடைபெற உள்ளது. 10-9-89 அன்று புட்டுக்கு மண் சுமந்த லீலை விழா நடைபெறுகிறது.

ஸ்ரீ ராஜ நாராயணப் பெருமாள் கோயில்

தஞ்சை மாவட்டம், காவிரிப் பூம்பட்டினத்தை அடுத்து, பூம் புகார் செல்லும் சாலையில் வெள்ளையன் இருப்பு என்ற இடத்தில் (இதன் முந்திய பெயர் ராஜ நாராயணபுரம்.) அமைந் திருப்பது ஸ்ரீ ராஜ நாராயணப் பெருமாள் திருக்கோயில். சிறிய கோயிலான இது, பல்லவனத்தில் உள்ள பல்லவனீச்சரக் கோயிலைச் சேர்ந்ததாகும். இது ராஜ ராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்ட தாக நம்பப் பெறுகிறது. இத் திருக் கோயிலுக்கென உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களி லிருந்து குத்தகை வருமானம் சரியாக வராததால் இங்கு 1-1-89 முதல் ஒரு காலப் பூஜை (காலை 10 மணி அளவில்) மட் டுமே நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயில் தென் கலை வகுப்பைச் சேர்ந்தது.


இத்திருக்கோயிலில் பெருமா ளுடன் ஸ்ரீதேவி, பூதேவி மூலஸ் தானத்தில் அமைக்கப்பட்டுள்ள னர். ஆண்டாள், சேனைமுதலி யார், மணவாள மாமுனிகள், ஆஞ்சநேயர், விக்னேஸ்வரர் (விஷ்வத்சேனர்) ஆகிய விக்கிர கங்களும் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன. ராஜநாயகி அம்பா ளுக்குத் தனியாகச் சன்னதி உள் ளது. மூலஸ்தானத்திற்கு நேர் எதிரே, பிரகாரத்தில் கருடன் சன்னதி உள்ளது. இங்கு சொர்க்க வாசல் இல்லை.

தாணிச்சா ஊரணி செ. மு. சித. சோம. சிவகாமிஆச்சி அவர் கள் 15 ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்கோயிலில் ஆஞ்சநேயர் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

இத்திருக்கோயிலில் பட்டாச் சாரியாராக இருந்துவரும் திரு. என். எஸ். டி. ரெங்காச்சாரி யைச் சந்தித்து இத்திருக்கோயில் பற்றிக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

இந்த இடத்தின் முந்திய பெயர் ராஜநாராயணபுரம், நகரத்தார்களுடைய திருமண இசைகுடிமானத்தில் 'கல்வாச நாட்டில் இளையாத்தக்குடியான ராஜ நாராயணபுரத்தில்....' என்ற வாசகம் வருகிறது. அந்த ராஜநாராயணபுரம் என்பது இந்த இடம்தான். இப்போது இதற்கு 'வெள்ளையன் இருப்பு' என்று பெயர்.


அந்தக் காலத்தில் இக் கோயில் இருக்குமிடம் காடும் புதருமாக இருந்ததாம். நான்கு தலைமுறையாக நாங்கள் இக் கோயிலில் பூஜை செய்து வருகி றோம். எங்களது பூர்வீகம் திரு



பட்டாச்சாரியார்
திரு. ரெங்காச்சாரி

நாங்கூர். என் தாத்தா திருவேங் கடத்தய்யங்கார் வாரம் ஒரு முறை சனிக்கிழமைதோறும் பூஜை செய்து வந்தார். எனக்கு இப்போது வயது 74. 50 ஆண்டு களாக நான் பூஜை செய்து வரு கிறேன். எனக்குப் பிறகு என் பையன் மோகன் ராஜன் பார்த்து வருவான்.

இக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி அன்று சுவாமி புறப்



ஸ்ரீ ராஜநாராயணப் பெருமாள் திருக்கோயில்.

பாடு உண்டு. கருட வாகனத்தில் உற்சவப் பெருமாள் எழுந்தருளுவார். அதற்கு, பக்கத்து இடங்களில் வசிப்பவர்கள் உபயம் செய்வார்கள்.

விஷகடி, வயிற்று வலியால் அவதிப்படுவோர் இங்கு வந்து பெருமாளைத் தெரிசித்து பூரண நலமடைகிறார்கள். இக்கோயிலில் வடமொழி தவிர தமிழிலும் அர்ச்சனை செய்யப்படுகிறது.

— இவ்வாறு அவர் கூறினர்.

இத்திருக்கோயிலில் இராயவரம் திரு. ப. வ. ராம். குழ. இராமநாதன் செட்டியார் இரும்புக் கதவு அமைத்துக் கொடுத்திருக்கிறார். இராயவரம் திரு. எம். ஏ. எம். எஸ்பி. காசிச் செட்டியார், கடியாபட்டி திரு. ஓ. எம். ஓ. ஆர்எம். உலகப்ப செட்டியார் திரு. ஓ. எம். ஓ. ஆர் எம். சுப்பையா செட்டியார் தேவகோட்டை திரு. எம். சுப்பிரமணியன் செட்டியார் சிறுகூடல்பட்டி திரு. டி. இராமநாதன் ஆகியோர் மின் இணைப்புச் செய்து உதவியுள்ளனர். கடியாபட்டி திரு. பி. கே என். பி. ஆர். நாகப்ப செட்டியாரும் இராயவரம் திரு. எம். ஏ. எஸ். சிடி. சுப்பிரமணியன் செட்டியாரும் மின் கட்டணத்தைத் தொடர்ந்து செலுத்தி வர நிதி உதவி செய்திருக்கிறார்கள்.

ஆக இத்திருக் கோயிலின் திருப்பணிகளைச் செய்து குடநீராட்டு விழா நடத்த வேண்டுமென்ற எண்ணம் காவிரிப்பூம் பட்டினம் வந்திருந்த நகரத்தார்களிடையே ஏற்பட்டுள்ளது.

நேர்முகம், கட்டுரை:

எல். சுந்தரம்

ஒப்பாரி

ஒப்பு வைத்துப் பாடுவதில் நகரத்தார் பெண்களுக்கு ஈடு இணைஇல்லை. அவர்களது ஒப்பாரி உணர்ச்சி மிகுந்ததாக இருக்கும்.

''தச்சன் அடித்த தளம்
பெரிய கட்டிலிலே
ஒக்க நெருங்கி ஒரு நாள் இருக்கலியே''

என்றும்—

''விதிஎன்றால் விலகி வரலாகாதா
சாவு என்றால் கொஞ்சம் தள்ளி
வரலாகாதா''

என்றும் பலவாறாக உணர்ச்சியைக் கொட்டிப் பாடக் கூடியவர்கள் அவர்கள். இவர்களது தாலாட்டுக்கள் பல கவிஞர்களது சிறப்பான பாடல்களுக்கு அடிப்படையாகும்.

— பழ. கருப்பையா
(பட்டினத்தடிகள் திருவிழாவில்)

காவிரிப்பூம்பட்டினத்துச் செய்திகள்

ஃ நாம் பிறந்த மண்ணாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் சுக்கில ஆண்டு ஆடி மீ 22 உ (6-8-89) முதல் ஆவணி மீ 1 உ (17-8-89) வரை 12 நாட்கள் பட்டினத் தடிகளின் அற்புதத் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

ஃ இத்திருவிழாவிற்கு இவ்வாண்டு வந்திருந்த நகரத்தார்களின் அதிகபட்ச எண்ணிக்கை சுமார் 800ஆகும் (ஆண்கள் 200 பேர்; பெண்கள் 600பேர்)


ஃ காவிரிப் பூம்பட்டினத்தில் உள்ள திருக்கோயிலுக்கு 'பல்லவ னீச்சரக் கோயில்' எனப் பெயர். இங்குள்ள சுவாமி 'பல்லவநாதர்' அல்லது 'பல்லவனீச்சுரர்' எனவும் அம்மை 'ஸ்ரீ சௌந்தர நாயகி' எனவும் அழைக்கப் பெறுகின்றனர்.

ஃ அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் பல்லவனீச்சரக் கோயிலின் திருப்பணியைச் செய்து முடித்து 20-5-1900லும் பின்னர் 20-8-1958லும் திருக் குட நன்னீராட்டுச் செய்துள்ளனர்.

ஃ இத்திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் பட்டினத்தாருக்கு தனிச் சன்னதி உள்ளது. தேவகோட்டை சேவு. லெ. லெ. குடும்பத்தாரும் சேவு. லெ. ராம. நா. குடும்பத்தாரும் இதை நிறுவியுள்ளனர்.

ஃ காவிரிப் பூம்பட்டினத்தில் உள்ள நகர விடுதி 1935க்கு முன்பு கட்டப் பெற்றிருக்கிறது. பின்னால் இது புதுப்பித்துக் கட்டப் பெற்றிருக்கிறது. கண்டனூர் நா அரு. கா. மகாதேவா காசிச்செட்டியார் அவர்கள் நகரத்தார்களிடம் நன்கொடை பெற்று இதைக் கட்டியிருக்கிறார்கள்.

ஃ இந்த நகர விடுதியை கோனாபட்டு விசாலாட்சி ஆச்சி அவர்கள் சுமார் 45 ஆண்டுகள் கண்காணித்து வந்திருக்கிறார்கள்.



காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில் 14-8-89 அன்று திரு. பழ. கருப்பையா உரையாற்றிய காட்சி. அருகே திரு. நா. சுப. சுப்பிரமணியன் செட்டியார், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ.

ஃ பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவில் 2ஆம் திருநாளன்று (7-8-89) திருவெண்காட்டில் உள்ள விடுதியில் தேவகோட்டை மு. ராம. சுப. குடும்பத்தார் திருவிழாவிற்கு வந்திருந்த அனை வருக்கும் மதிய உணவும் இரவு உணவும் இலவசமாக வழங்கினர் கள்.

ஃ மேற்படி திருவிழாவில் 7-8-89 அன்று மாலையில் காரைக் குடி செக்காலை க. அ. ப. அண்ணா மலை செட்டியார் குடும்பத்தார் அனைவருக்கும் மிக்சர், காபி இலவசமாக வழங்கினர்கள்.

ஃ 8-8-89- 3ஆம் திருநாளன்று திருவெண்காட்டில் உள்ள பழநி யப்பா அரிசி அரவை ஆலையில் கொப்பனாபட்டி லெ. பழ. குடும் பத்தார் வந்திருந்த அனைவருக் கும் காலைப் பலகாரம், காபி இலவசமாக வழங்கினர்கள்.

ஃ 8-8-89 3 ஆம் திருநாள் திருக்கல்யாணத்தன்று காவிரிப் பூம்பட்டினம் நகர விடுதியில் கண்டவராயன்பட்டி நா. சி. சொக்கலிங்கம் செட்டியார் அவர் கள் வந்திருந்த அனைவருக்கும் மதிய உணவு இலவசமாக வழங் கினர்கள்.

ஃ 9-8-89 4ஆம் திருநாளன்று காலையில் கண்டவராயன்பட்டி பெரி. சோம. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் (கல்கத்தா 'சோவன்னா மானா') தம் துணைவி யார் திருமதி நாச்சம்மை ஆச்சி யின் நினைவாக வந்திருந்த அனை வருக்கும் இலவசமாக பலகாரம் காபி வழங்கினர்கள்.



காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகளின் 7 ஆம் திருநாளன்று (12-8-89) வேந்தன்பட்டி திரு. T. குமரப்பன் ஒப்பு வைத்துப் பாடும காட்சி. அருகே திரு. பழ. தெ. லெ. அருணுசலம்செட்டியார் அன்பு திரு, நா. சிதம்பரம், திரு. எல். சுந்தரம்.

ஃ பட்டினத்தடிகள் அற்புதத் திருவிழாவிற்கு வரும் நகரத்தார் பெருமக்கள் குளிப்பதற்கு வசதியாக பல்லவனீச்சரக் கோயில் முன்பு உள்ள தெப்பக்குளத்தில் ஆழ்கிணறு குழாய் மூலம் சுமார் ரூ. 2000/- செலவில் திருவிழா நிர்வாகத்தினர் இந்த ஆண்டும் தண்ணீர் விட்டு நிரப்பி உதவினர்.

ஃ தேவகோட்டை 'காசிஸ்ரீ' சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் காவிரிப்பூம்பட்டினம் திருவிழாவில் சுமார் 50 நகரத்தார் ஆண்கள், பெண்களுக்குச் சமய தீட்சை செய்து வைத்திருக்கிறுர்கள்.

ஃ நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் திரு. கண. சுப்பையா 7-8-89 அன்று திருவெண்காடு சுவேதாரண்யேசுவர சுவாமி கோயிலிலும் 9-8-89 அன்று சாயாவனம் சாயாவனேஸ்வர சுவாமி கோயிலிலும் உரையாற்றிஞர்கள்.

ஃ திருவெண்காடு சுவேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயிலின் நிர்வாக அதிகாரி திரு, எம். சுந்தரராஜும் திரு. சோமுக் குருக்களும் 7-8-89 அன்று நகரத்தாரிடையே உரையாற்றிஞர்கள்.

ஃ பட்டினத்தடிகள் திருவிழா காவிரிப்பூம்பட்டினத்தில் 1922 ஆம் ஆண்டு தொடங்கியது என்றும் அப்போது 3, 4 நாட்களே நடைபெற்றதென்றும் திரு. பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார் தெரிவித்தார்.

ஃ காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழா பேரவை நிகழ்ச்சியில் 12-8-89 காலையில் "வீடணன் தமையனைப் பிரிந்து இராமனைச் சேர்ந்தது குற்றம்" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்ந்தது. பேராசிரியர் திரு. இரா. சந்திரசேகரன் வழக்குத் தொடுக்க முனைவர் திரு. பழ. முத்தப்பன் மறுத்தார். 'இரசிக

மணி' திரு. ஆர்எம். சிதம்பரம் செட்டியார் தலைமை தாங்கினர்.

ஃ பட்டினத்தடிகளின் 10 ஆம் திருநாளன்று (15-8-89) குரு பூஜையை யொட்டி கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிசுவநாத ஞான தேசிக சுவாமிகள் பகல் 12-05 மணிக்கு காவிரிப்பூம்பட்டினத் திற்கு வருகை தந்தபோது விடுதி முன்பு அவர்களுக்குப் பூரண கும்ப மரியாதை செய்யப் பெற் றது. சுவாமிகளை நகரத்தார் சார்பாக கல்லல் ஆ. மு. ஆ. முரு. சுப. மாணிக்கம் செட்டி யார் அவர்கள் மாலையணிவித்து வரவேற்ருர்கள்.

ஃ குருபூஜையன்று (15-8-89) விடுதியில் 'காசிஸ்ரீ' திரு. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பட்டினத்தார் சரித்திரத்தைப் படித்தார்கள்.

தாலாட்டு

பட்டினத்தடிகளின் 4 ஆம் திருநாள் நள்ளிரவில் (9-8-89) மருதவாணர் குழந்தைக்குத் தாலாட்டும் நிகழ்ச்சி நடைபெற் றது. அப்போது திருவாளர்கள் ஆத்தங்குடி விகடம் காசிச்செட்டி யார், உ. சிறுவயல் கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார், வேந்தன்பட்டி 'தாலாட்டு' T. குமரப்பன் காரைக்குடி க. அ. ப. அ. பழநியப்பன், நாட்டரசன் கோட்டை லெட்சுமி ஆச்சி ஆகி யோர் தாலாட்டுப் பாடல்களைப் பாடிக் களிப்பித்தனர். இவர் களுக்குப் பரிவட்ட மரியாதை செய்யப் பெற்று காளாஞ்சி வழங்கப்பெற்றது. இந்த நிகழ்ச் சியில் குழந்தைக்கு இளையாத்தக் குடி பட்டினசாமி வகுப்பைச் சேர்ந்த வேந்தன்பட்டி அழகப்ப செட்டியார் அவர்கள் 'மருத வாணர்' எனப் பெயரிட்டார்கள்.

ஃ 15-8-89 அன்று மாலை 5 மணி அளவில் காவிரிப்பூம்பட்டி னம் நகர விடுதியில் 14 மங்கலப் பொருட்கள் ஏலம் விடப்பெற் றன. திரு. பழ. தெ. லெ. அருணசலம் செட்டியார் ஏலம் கூவ, தேவகோட்டை 'காசிஸ்ரீ' சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஏலம் எடுத்தவர்களுக்கு ஏலப் பொருட்களை வழங்கினு கள்.

ஃ பட்டினத்தடிகளின் 7 ஆம் திருநாளில் (12-8-89) நாட்டு வைத்தியராக புதுவயல் திரு. அ. குப்பான் செட்டியாரும் பம்பாய் டாக்டராக கண்டனூர் திரு. பஆர். அருணசலமும் கம்பவுண்டராக கண்டனூர் திரு. சொ. பழநிமலையும் பயிற்சி டாக்டராக செந்திலும் நடித் தனர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் கப்பல் யாத்திரை

பட்டினத்தடிகளின் 5 ஆம் திருநாளன்று (10-8-89) மருத வாணர் கப்பல் யாத்திரைக்குச் செல்லும் நிகழ்ச்சியில் திருவாளர் கள் கண்டனூர் கா. அரு. கா. அருணசலம் செட்டியார் உ. சிறுவயல் கு. வெ. கு. வெங்கடா சலம் செட்டியார், தேவகோட் டை கேஎன். சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி க அ. ப. அ. பழநியப்பன், கண்டனூர் வள்ளல் சீனி, தேவகோட்டை அரு. சோ. நீலாயதாட்சி மான கிரி ரெ. மெய்யம்மை ஆச்சி கடியாபட்டி தீ. சொ. முரு சுப. கோ. வெ. வள்ளியம்மை ஆச்சி ஆகியோர் கப்பலுக்குப் பின்னல் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டு கடற்கரை சென்று திரும்பினர்.

அரு. சோ. வின் முத்துக்கள்!

ஃ பஞ்சாப், அரியானு, மாநிலங்களிலும் டில்லியிலும மகாபாரத நிகழ்ச்சிகள் நடந்தன.

ஃ இராமாயண நிகழ்ச்சிகள் நடந்த இடம் இலங்கை.

ஃ பொருமை வந்தால் ஆத்திரம் வரும்; ஆத்திரம் வந்தால் கோபம் வரும்; கோபம் வந்தால் சண்டை வரும்.

ஃ யுத்தத்தை யார் வேண்டுமானுலும் தொடங்கலாம். அதை நிறுத்துவது என்பது கடினம்.

ஃ தாமரையும் அல்லியும் ஒரே குளத்தில் இருக்கக் கூடியவை. ஆனுல் தாமரை பகலில் மலரக் கூடியது. அல்லி இரவில் மலரக் கூடியது.

ஃ ஆசை ஏற்படுவது தவறல்ல; பேராசை ஏற்படுவது தான் தவறு.

ஃ அன்பினுலே பகவானைக் கட்டலாம்.

— 'காசிஸ்ரீ' அரு. சோ.

(பட்டினத்தடிகள் திருவிழாவில் ''மகாபாரத''ச் சொற்பொழிவில்)

குருபூசை

கானையார்கோவில் கா. செ மடாலயத்தில் 24-7-89 அன்று கானை ஆதீன முதல்வர் தவத்திரு செல்லப்ப சுவாமிகளின் குருபூஜை சிறப்பாக நடைபெற்றது திரு. சோம. நாராயணன் அனைவரையும் வரவேற்ருர். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் ''அடியவர் பெருமை'' என்ற தலைப்பில் உரையாற்றினுர். கோவிலூரர் ஆதீனகர்த்தரும் துருவானந்த சுவாமிகளும் ஆசி கூறினர்.

நோயாளியும் மருத்துவரும்!

ஒரு நோயாளியை மனே தத்துவ டாக்டர் சோதிக்க வந்தார்.

அப்போது ''உங்களுக்கு லாட்டரியில் 10 ஆயிரம் ரூபாய் பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார், டாக்டர்.

''வீட்டுத் தேவைக்கு ஏதாவது பொருட்களை வாங்குவேன்'' என்ருர் நோயாளி.

''10 இலட்சம் பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று மீண்டும் கேட்டார், டாக்டர்.

''வீடுகள் வாங்குவேன்'' என்ருர் நோயாளி.

''50 இலட்சம் பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார் டாக்டர்.

''நல்ல வகையில் முதலீடு செய்வேன்'' என்ருர் நோயாளி.


''ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று மீண்டும் கேட்டார், டாக்டர்.

''உங்களுக்குக் கொடுத்துடுவேன்'' என்ருர் நோயாளி, சற்றும் யோசிக்காமல்.

அடுத்த நிமிடமே அதிர்ச்சியில் டாக்டர் இறந்து போனுர்.

— சொ. சொ. மீ. சுந்தரம்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில்)



அலவாக்கோட்டை சிவன் கோயிலின் மண்டலாபிஷேக விழா வில் (19-7-89) திருக்குட நன்னீராட்டு விழா நினைவு மலரை 'பொற்கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வெளியிட, திரு. வெ. கண. சித. வெ. கண்ணப்ப செட்டியார் பெற்றுக் கொள்ளும் காட்சி.

பட்டினத்தார் பற்றி
பழ. கருப்பையா

பட்டினத்தார் தவப்புதல்வர்; அவர் பதினெட்டுச் சித்தர்களிலே ஒருவர். பட்டினத்தாருக்கு நிகரான ஞானி, இராமலிங்க வள்ளலார். திருமூலரும் சிவபாக்கியரும் பட்டினத்தாரைப் போன்றவர்கள்.


பாடுவார், நினைத்தவுடன் பாடக்கூடிய ஆற்றல் பெற்றவர். அறம் பாடுவதில் சிறந்தவர். அவரது வாக்கு வன்மை, நெஞ்சத் தூய்மையைப் பொறுத்துப் பலிக்கிறது.

கவியரசர் கண்ணதாசனின் பாடல்கள் ஏழு பகுதிகளாக வெளிவந்துள்ளன. அத்தனையையும் பற்றி எழுதிக் குவித்தவர் அவர். பாரதியை விட, பாரதிதாசனை விட எளிமையாகப் பாடல்களை எழுதக் கூடியவர் கண்ணதாசன். பெரிய அளவுக்கு மக்கள் கவிஞராக வாழ்ந்தார். பாரதிதாசன் பாடல்கள் சங்க நாதமாக ஒலிக்கும். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை பிறக்கக் கூடியவர் கண்ணதாசன். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை பிறக்கக்கூடியவர் பட்டினத்தார். பாடுவார் ஞானி அல்ல; ஆனால் பட்டினத்தார் ஞானி.

''குடியிருந்த கோயில் கொள்ளி வைக்க வருவேன்'' என வாக்குறுதி கொடுத்தவர் பட்டினத்தார். ''ஈரலை ஒதுக்கி இடம் கொடுத்த தாய்'' எனப் பாடியிருக்கிறார். தாயை மிகுதியாகப் போற்றியவர் பட்டினத்தார். பட்டினத்தடிகளைக் கொண்டாட நினைப்பதே பெருமையுடையது. ஒரு தனி மனிதனின் பெயரால் கோயிலில் பிரிவு இருப்பது (பட்டினசாமி) பட்டினத்தாருக்கு மட்டும் தான்.

(பட்டினத்தடிகள் திருவிழா பேரவை நிகழ்ச்சியில் திரைப் படத் தயாரிப்பாளர் காரைக் குடி திரு. பழ. கருப்பையா கூறியது.)

91/1



'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் காவிரிப்பூம்பட்டினத்தில் 14-8-89 அன்று தனது 54ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய போது 'இரசிகமணி' திரு. ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவருக்குப் பொன்னுடை போர்த்தி வாழ்த்துத் தெரிவித்தார்.

அரு. சோ. பிறந்த தினத்தைக் கொண்டாடினர்

'பொற்கிழிக் கவிஞர்' 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரனின் 54ஆவது பிறந்த தினம் 14-8-89 திங்கட்கிழமையன்று காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள பல்லவனீச்சரக் கோயிலில் சிறப்பாக நடைபெற்றது.

பிறந்த தினத்தையொட்டி பல்லவநாதர், ஸ்ரீ சௌந்தர நாயகி, மற்றும் பட்டினத்தாருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

பல்லவனீச்சரக் கோயிலில் திருவாளர்கள் சே. என். சொக்கலிங்கம், என். காசிநாதன், வயிரவன், லெட்சுமணன், கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார் திருமதி வயி. வள்ளியம்மைஆச்சி ஆகியோர் பக்திப் பாடல்களைப் பாடினர்.

நகர விடுதியில் 'இரசிகமணி ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் திரு. அரு. சோ.வுக்கும் அவரது துணைவியார் திருமதி நீலாயதாட்சிக்கும் பொன்னுடை அணிவித்துப் பாராட்டுரை வழங்கினார்கள். அப்போது திரு. அரு. சோ. வின் நட்சத்திரம் புனர்பூச நட்சத்திரம் என்றும் அது இராம பிரானின் நட்சத்திரம் என்றும் குறிப்பிட்டார்கள். 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் வாழ்த்துரை வழங்கியபோது, தான் அவருடைய மாணவன் என்றும், தான் வாழ்கிற காலத்திலே வாழ்கிற இராமபிரானாக அவரைக் கருதுவதாகவும் குறிப்பிட்டார். அடுத்து தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் கவிதையில் வாழ்த்தினார். திரு. பழ தெ. லெ. அருணாசலம் செட்டியாரும் வாழ்த்திப் பேசினார்.

திரு. அரு. சோ. தன் பிறந்த தினத்தை யொட்டி பட்டினத்தடிகள் திருவிழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் மிட்டாய், பாயாசம் வழங்கினார்.

உங்கள் குரல்

ஆகஸ்ட்' 89 இதழில் ''நாவல் இலக்கியமும் நகரத்தார்களும்'' என்ற கட்டுரையில் மேலைச்சிவபுரி சொ. பனையப்ப செட்டியார் அவர்கள் ஐந்து நாவல்களை எழுதியிருக்கும் விவரம் வெளி வந்திருக்கிறது. அவர்கள் சிறந்த நாவல்களை எழுதியிருப்பதுடன் காகிதம், எஸ்ஸென்ஸ் வணிகத்திலும் முன்னேடியாகத் திகழ்ந்தார்கள்.

ஆவினிப்பட்டி சின்னக்கருப்பன் அவர்களின் செயலாக்கங்களைப் பார்க்கும் போது அவர்களைப் 'பெரியகருப்பன்' என்றழைப்பதே பொருத்தமாகும்,

எல். சுந்தரம் அவர்களின் 'கருணை காட்டுங்கள்' கட்டுரையைப் படித்தபின் படிக்கப் போகிறவர்களுக்கு எல்லோருமே கருணை காட்டுவார்கள் என்பது உறுதி.

மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

திரு. எல், சுந்தரம் எழுதிய ''கருணை காட்டுங்கள்'' கட்டுரை சிறப்பாக இருந்தது.

நாவல் இலக்கியம் பற்றி திருமதி லெட்சுமி மீனுட்சி சுந்தரம் எழுதியிருந்த கட்டுரையைப் படித்தேன். ''கறிவேப்பிலை'' என்ற நவீனத்தில் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்களும் ''சின்னம்மா'' என்ற நவீனத்தில் ''குமுதம்'' ஆசிரியர் எஸ். ஏ. பி அண்ணுமலை அவர்களும் ''ஆச்சி'' என்ற நவீனத்தில் கவியரசர் கண்ணதாசன் அவர்களும் நகரத்தார் பற்றிச் சிறப்பாக எழுதியிருப்பதை முனைவர் லெட்சுமி மீனுட்சிசுந்தரம் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். டாக்டர் தமிழண்ணல் அவர்களும் நகரத்தார்களைப் பற்றி ஒரு நவீனத்தை எழுதி வெளியிட்டிருக்கிருர்கள்.

வெ. நாராயணன்
காரைக்குடி

பனையப்பட்டி வி. கா. வினைதீர்த்தான் செட்டியார் அவர்களைப் பற்றிய அரிய செய்திகளை ''குரல்'' மூலம் தெரிந்து கொண்டேன். ''கருணை காட்டுங்கள்'' கட்டுரை சிறப்பானது. அவசியமானதும் கூட.

எஸ். கண்ணப்பன்
திருச்சி

ஆத்தா வாங்க,.. ஆயாவைப் பாருங்க...

ஆத்தா, வாங்க ... ஆயாவைப் பாருங்க ....

ஆயாவுக்கு வர வரக் கை ரொம்ப அசதியா இருக்கு. கை பார்க்கத் தெரிஞ்சவங்க இருந்தா, யாராவது கூட்டியாங்க ஆத்தா...

ஆயா மூணு நாளாக் கெடையாக் கெடக்கா.. எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு. பயமா இருக்கு.. உள்ளூரிலே இருக்கிறவங்க கூட வரமாட்டேங்கிறுங்க....

தேவகோட்டை அழகம்மை ஆச்சி இருந்தாக் கூட்டியாங்க. அவங்க நல்லா கை பார்ப்பாங்க...

ஆயா எனக்கு பலகாரம்னு அப்படிப் பண்ணித்தருவா பாசிப் பருப்புலே மாவுருண்டையாப் பண்ணித்தருவா. வெள்ளைப் பணியாரம் பண்ணித்தருவா.. நாட்டரசன்கோட்டையிலே கத்துக்கிட்டுவந்து அரை வட்டுக் கருப்பட்டிப் பணியாரம் பண்ணித் தருவா.. இனி யாரு எனக்கு பலகாரம் பண்ணித் தருவாங்க.

ஆயா, வாலும் தோலுமாப் போயிட்டா. நாட்டு வைத்தியரு வரட்டும், பொழைக்க வைக்க முடியுமான்னு பார்ப்போம்.

சிதம்பரண்ணே.. குழந்தையண்ணே.. சுந்தரண்ணே.. வாங்க.. இப்பத்தான் தகவல் கிடைச்சதா? ஆயாவுக்கு சதா உங்க ஞாபகம் தான்....

மகளுக்கு ரொம்பக் கவலே. அதனுலே தலைமாட்டிலே இருந்து அழுதமனியமா இருக்கா. கால் மாட்டிலே மருமக வெத்திலே பாக்குப் போட்டுக்கிட்டுச் சிரிச்ச மனியமா இருக்கா, எப்ப பெட்டிச் சாவியைக் கையிலே பிடிப்போம்னு..

ஆயாவுக்கு நாடி பாருங்க.. நாடியைக் கையிலே எடுத்துக்கிட்டு வந்துடாதீங்க...

பித்தம் பேசுதுங்கிறுங்க.. அது தமிழ்லே பேசுதா, ஆங்கிலத்திலே பேசுதா?

ஆயாவை நெனேச்சா கவலே கண்ணைப் பிடுங்குது.. அய்யா! டாக்டர் வந்துட்டாரு. எப்படிப் பிழைக்க வைக்கப் போருரோ!

ஆயா போயிட்டாளே! எனக்கு ஒண்ணும் புரியலியே! ஜானகி ஆச்சி வாங்க.. பேரன் பேத்திமார்கள் எல்லாம் வாங்க... காசித் தீர்த்தத்தை ஆயா வாயிலே ஊத்துங்க.. சிவ புராணம் சொல்லுங்க ஆயா காதுலே நல்ல வார்த்தை விழட்டும்.

ஆத்தா வாயைக் கட்டுங்க.. காலேக் கட்டுங்க.. பசு தானம் கொடுக்கோணும்...

ஆயா காரியம் முடிஞ்சு போச்சு.. எனக்குத்தான் ரொம்பக் கவலேயா இருக்கு என்னுலே அழுக முடியலே.. மாவுருண்டை... வெள்ளைப் பணியாரம்....

— பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் அற்புதத் திருவிழாவில் 12-8-89 அன்று ஞானகலாம்பிகை பரிபூரணமடையும் நிகழ்ச்சியில் பேரனுக நடித்த போது கூறியது.)

ஒப்பாரி

பட்டினத்தடிகளின் 7 ஆம் திருநாளன்று (12-8-89) பட்டினத்தடிகளின் தாயார் ஞானகலாம்பிகை பரிபூரணமடைந்து சேதம் கேட்கும் நிகழ்ச்சியில் பள்ளத்தூர் வள்ளியம்மை ஆச்சி, கீழப்பூங்குடி மீனுட்சி ஆச்சி, வேந்தன்பட்டி T. குமரப்பன் ஆகிய மூவரும் ஒப்பு வைத்துப் பாடினர்.

காவிரிப்பூம்பட்டின நகர விடுதி : சாப்பாட்டுக் கூடத்தை விரிவுபடுத்தி அமைக்க ஏற்பாடு!

காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதியில் தற்போது உள்ள சாப்பாட்டுக் கூடத்தை விரிவு படுத்தி புதிதாக மாடியுடன் அமைக்க ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிட் நிறுவனத்தின் முதுநிலை மேலாளர் 'இரசிகமணி' ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட 'காவிரிப்பூம்பட்டின நகரவிடுதிக் கட்டிட விஸ்தரிப்புக் குழு' இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

'இரசிகமணி' ஆர்எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் 14-8-89 திங்கள் மாலையில் காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதியில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது அப்போது இரண்டரை இலட்சம் ரூபாய் திட்டத்தில் சாப்பாட்டுக் கூடத்தை விரிவுபடுத்திக் கட்டுவது என்றும் இப்போது கையிருப்பில் உள்ள சுமார் ரூ. 1,05,000 போக தேவையான தொகையை ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் மூலமாகப் பெற்றுக் கட்டிடத்தைக் கட்டி முடிப்பது என்றும் நன்கொடை வசூலானதும் கொடுத்த தொகையை ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்வது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப் பெற்றது.

இந்தக் கட்டிட விஸ்தரிப்புக் குழுவில் பொன். புதுப்பட்டி நாக. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும் இராயவரம் வயி. சித. வயிரவன் செட்டியார் அவர்களும் (வெஸ்ட்) குளிபிறை டி. எம். ஆர் எம். இராமநாதன் செட்டியார் அவர்களும் செயலாளர்களாகவும் விரையாச்சிலை ஏ ஆர். முத்துச் செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் மற்றும் அமராவதிபுதூர் வெ. ராம. சோம. கரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் கண்டனூர் நா. அரு. கா. அருணாசலம் செட்டியார் அவர்களும் கண்டனூர் வயி சோம. வயி. நா. வயிரவன் செட்டியார் அவர்களும் இராயவரம் பவ. பழ. ராம. வயிரவன் செட்டியார் அவர்களும் கண்டனூர் நா. அரு. கா. நா. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்களும் கண்டவராயன்பட்டி ஏஎல். எஸ். அழகப்பன் அவர்களும் செயற்குழு உறுப்பினர்களாக இருந்து செயலாற்றி வருகிறார்கள்.

இந்தக் கட்டிட விஸ்தரிப்புக்கு 'காவிரிப்பூம்பட்டின நகர விடுதிக் கட்டிட விஸ்தரிப்பு' என்ற பெயரில் பாங்க் டிராப்ட் அல்லது செக் மூலமாக அதன் தலைவர் ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் முதுநிலை மேலாளர், ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிட், 54 கீழவெளி வீதி, மதுரை-625 001 என்ற முகவரிக்கு நன்கொடைகளை அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

ஃ எங்கு ஏழ்மையும் இல்லாமையும் இல்லாமல் இருக்கிறதோ அங்கேதான் மனிதத் தன்மையைக் காண முடியும்.

— லெனின்

சொ. சொ. மீ. சுந்தரம் உதிர்த்த நல் முத்துக்கள்!

ஃ ஆண் கற்ருல் அவன் மட்டுமே படிக்கிருன்; பெண் கற்ருல் அந்தக் குடும்பமே படிக்கிறது.

ஃ ஒரு வேளை சாப்பிடுகிறவனுக்கு யோகி என்றும் இரண்டு வேளைகள் சாப்பிடுகிறவனுக்கு போகி என்றும் மூன்று வேளைகள் சாப்பிடுகிறவனுக்கு ரோகி என்றும் பெயர். நான்கு வேளைகள் சாப்பிடுகிறவனை துரோகி என்று அழைக்கலாம்.

ஃ நாம், தாய் அல்லது தாரம் சோறுபோடச் சாப்பிட வேண்டும். சமையல்காரன் அல்லது வேலைக்காரன் சோறுபோடச் சாப்பிடக்கூடாது. அது உடலில் ஒட்டாது.

ஃ அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு தயார் செய்யக்கூடாது; அது சந்நியாசத்துக்கு ஏற்பாடு செய்தது ஆகும்.

ஃ வாழ்க்கையில் ஆண்டவன் நம்மைப் பக்குவப் படுத்துகிருன்.

ஃ தூங்குகிற கர்ப்பிணிப் பெண்ணை எழுப்பினுல் அவளுக்குப் பிறக்கிற குழந்தை ஒச்சத்தோடு பிறக்குமாம்.

ஃ சிலர் தலைக்கனம் பிடித்துத் திரிகிருர்கள். தலை கனத்தால் அடிவிழும். அதற்கு ஆணி சாட்சி.

ஃ நாம் செய்கிற நல்ல காரியங்களை நமக்குப் பிறகு தொடர்ந்து செய்கிறதுக்குத்தான் பிள்ளை. வாழை, தான் சாகிறபோது தன் வாரிசுக்கு ஒரு கன்றை ஈன்றுவிட்டுப் போகிறது அல்லவா! இதுவே அதற்கு உதாரணம்.

ஃ ஆண்டவன் நமக்குக் கொடுத்த வரங்கள் மூன்று: 1. மறதி 2. தூக்கம் 3. இன்ன நாளில் இறந்து போவாய் என்று சொல்லாமல் விட்டது.

ஃ நல்லவற்றைப் பிறருக்குச் சொல்லவேண்டும். இல்லையேல் சுமை நமக்குப் பாரம்.

ஃ பெண்மை பேசாது; பேசி விட்டால் அதை நிறுத்த முடியாது.

ஃ புரட்டாசி மாதம் யாரெல்லாம் சைவமிருக்கிருர்களோ அவர்களெல்லாம் வைஷ்ணவர்கள் என்றும் கார்த்திகை மாதம் யாரெல்லாம் சைவமிருக்கிருர்களோ அவர்களெல்லாம் சைவர்கள் என்றும் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் சொல்வார். அதனுல்தான் நாம் 'சிவமதம்' என்று எழுதுகிறேம்.

பேராசிரியர்

— சொ. சொ. மீ. சுந்தரம்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில் 13-8-89 அன்று "முன் பிறந்து பின் பிறந்தான்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய போது கூறியவை.)

மகேஸ்வர பூஜை

நகரத்தார் மகேஸ்வர பூஜை பரிபாலன சபையின் சார்பாக 16 ஆம் ஆண்டு மகேஸ்வர பூஜை 13-8-89 அன்று நடைபெறுவதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. அது இப்போது 1-10-89 ஞாயிறன்று சென்னை அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை கோயில் மண்டபத்தில் பழநி அருளாடியார் கண்டனூர் சுப. பழநியப்ப செட்டியார் அவர்கள் முன்னிலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.


"விடுதலை யாருக்கு?" - நீதிமன்ற நிகழ்ச்சி!

காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகளின் 8ஆம் திருநாளன்று (13-8-1989) நகர விடுதியில் ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக பாத்திரங்களாக வேடமிட்டு வாதிட்ட புதுமையான நீதி மன்ற நிகழ்ச்சி நடைபெற்றது. திருவிழாவிற்கு வந்திருந்த நகரத்தார்கள் இதை ஆர்வத்தோடு கண்டு களித்தனர்.

கர்ணனாக பேராசிரியர் திரு. பாஸ்கர பால்பாண்டியனும் கோவலனாக 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பனும், துரியோதனனாக பேராசிரியர் திரு. நா. சுப்பிரமணியனும், இராவணனாக பேராசிரியர் திரு. தியாகராஜனும் நடித்தனர். வழக்கறிஞர்களாக செல்வி சு. சரஸ்வதி, செல்வி நா. முத்தழகம்மை, பேராசிரியர் திரு. இரா. அன்பழகன், திரு. எம். என். நாராயணன் ஆகியோர் பங்கு பெற்று வாதிட்டனர். நீதிபதியாக பூம்புகாரைச் சேர்ந்த முனைவர் திரு. ஆ. ஜெகநாதன் பொறுப்பேற்றுச் சிறப்பித்தார். 'இரசிக மணி' ஆர்எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பதிவாளராகப் பொறுப்பேற்றுச் செயலாற்றினார்கள். "விடுதலை யாருக்கு?" என்பது வழக்கின் தலைப்பாகும். இந்த நீதிமன்ற நிகழ்ச்சியை மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் இயக்கினார். (இந்த நீதிமன்ற நிகழ்ச்சி 45ஆவது முறையாக அரங்கேற்றப் பெறுவதாக அன்று அறிவிக்கப் பெற்றது.) 2 மணி 45 நிமிடங்கள் நடைபெற்ற இந்த நீதிமன்ற நிகழ்ச்சியின் முடிவில் கோவலனை விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். ஒரு நல்ல சரித்திர நாடகத்தைப் பார்த்த உணர்வு ஏற்பட்டது.

அந்த நீதிமன்ற நிகழ்ச்சியில் கேட்ட சில சுவையான உரையாடல்களை இங்கு தருகிறோம்:-

கர்ணன்: நீதிபதி அவர்களே, நீங்கள் தாடி வைத்திருப்பது எதற்காக?



"விடுதலை யாருக்கு?" என்ற நீதிமன்ற நிகழ்ச்சியில் கர்ணன் (திரு. பாஸ்கர பால்பாண்டியன்) துரியோதனன் (திரு. நா. சுப்பிரமணியன்) கோவலன் (திரு. அரு. நாகப்பன்) இராவணன் (திரு. தியாகராஜன்) பங்கு பெற்ற காட்சி.

நீதிபதி: நானாக வைத்துக் கொள்ளவில்லை. கன்னத்தில் காலம் வரைந்த கவிதை. முத்தத்தின் எச்சில் படாமல் என் முகத்தில் விரித்த கருப்பு வலை. தலை மலையிலிருந்து, தரை நோக்கி இறங்குகிற கறுப்பு அருவிகள். எனக்குப் பிடித்த காரல் மார்க்ஸுக்கு என் கன்னம் எடுத்திருக்கும் நினைவுச் சின்னம்.

ஃ ஃ ஃ

இராவணன் வழக்கறிஞர்: உங்கள் மணிமுடி எங்கே?

கர்ணன்: வரும் வழியில் ஒருவன் கேட்டான்; கழற்றிக் கொடுத்து விட்டேன். உங்களுக்கு ஏதாவது வேண்டுமென்றால் கேளுங்கள்; நீதி மன்றம் முடிந்ததும் தருகிறேன்.

வழக்கறிஞர்: நீங்கள் கொடை வள்ளல்தானே?

கர்ணன்: ஆமாம்.

வழக்கறிஞர்: அப்படியிருக்கும்போது துரியோதனன் அரச சபையில் பாஞ்சாலி ஆடை கேட்டு அழுதபோது நீங்கள் ஏன் கொடுக்கவில்லை?

கர்ணன்: அவள் என்னிடம் ஆடை கேட்கவில்லை கண்ண னிடம் கேட்டாள். அதனால் நான் கொடுக்கவில்லை.

ஃ ஃ ஃ

நீதிபதி: உங்களுக்குப் பத்துத் தலைகள் இருக்கும்போது ஒரு தலையுடன் வந்தது ஏன்?

இராவணன்: பெண் வழக்கறிஞர் பயப்படுவார் என்பதற்காக 9 தலைகளைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு தலையுடன் வந்தேன்.

நீதிபதி: நீங்கள் சீதையை ஏன் தூக்கிச் சென்றீர்கள்?

இராவணன்: என்னால் தூக்க முடிந்தது; தூக்கிச் சென்றேன். நீங்களும் ஏதாவது பேசினீர்களேயானால் இந்த நீதி மன்றத்தையே பெயர்த்துத் தூக்கிக் கொண்டு சென்று விடுவேன்.

ஃ ஃ ஃ

பெண் வழக்கறிஞர்: நீங்கள் கண்ணகியைப் பாராட்டிய துண்டா?

கோவலன்: என்னம்மா அப்படிக் கேட்டுவிட்டீர்கள்..? என்னைப் போல என் மனைவியை இந்த உலகத்தில் யாரும் பாராட்டி யிருக்க முடியாது.

பெண் வழக்கறிஞர்: எப்படிப் பாராட்டினீர்கள்?

கோவலன்: மாசறு பொன்னே.. வலம்புரி முத்தே....

(பெண் வழக்கறிஞரைப் பார்த்துக் கை நீட்டிப் பேசுகிருர்)

வழக்கறிஞர்: அந்தப் பக்கம் பார்த்துப் பேசுங்கள்.

ஃ ஃ ஃ

நீதிபதி: நீங்கள் வணங்காமுடி மன்னன் தானே?

துரியோதனன்: ஆமாம்.

நீதிபதி: நீங்கள் பெண்மைக்கு ஏற்றம் தந்தவர் தானே..?

துரியோதனன்: ஆமாம்.

நீதிபதி: நீங்கள் ஒரு பெண்ணை அரச சபையில் வைத்துச் சேலையைப் பிடித்து இழுத்தீர்களே அது நியாயமா?

துரியோதனன்: எந்தச் சூழ்நிலையில் செய்தேன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பாஞ்சாலி என்னைப் பார்த்துச் சிரித்தாள். அது மட்டுமல்ல. ''குருடன் மகன் தானே'' என்று என்னைப் பார்த்துச் சொன்ஞள். என்னைப் பார்த்து என்ன பேசியிருந்தாலும் பரவாயில்லை. என் தந்தையைக் 'குருடன்' என்று ஏசிய காரணத்தால் நான் அவளை மானபங்கப்படுத்தினேன்.

ஃ ஃ ஃ

நீதிபதி: நீங்கள் குற்றவாளி தானே?

கோவலன்: என்னைப் போய்க் குற்றவாளி என்கிறீர்களே.. நான் என் மனைவி கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவியை நாடிச் சென்றேன். மாதவியை விட்டுப் பிரிந்து மீண்டும் கண்ணகியிடம் சென்றேனே தவிர மூன்ருவதாக ஒருத்தியை நாடிச் செல்லவில்லையே.. பிறன் மனை நோக்காத பேராண்மை வேண்டும் என்ற பண்பு என்னிடம் இருந்தது. நான் என்னுடைய இரு மனைவிகளுக்குத் துன்பம் கொடுத்திருப்பேனே தவிர இராவணனைப் போலவோ துரியோதனனைப் போலவோ அடுத்தவன் மனைவிக்குத் துன்பம் தரவில்லை.

ஃ ஃ ஃ

நீதிபதி தீர்ப்பில் கூறியதாவது:-

இந்த நான்கு பாத்திரங்களில் துரியோதனன் பெண்ணை அவமானப்படுத்திய மாபெரும் குற்றத்தைச் செய்தவன். கர்ணனே அதற்குத் துணைபோன குற்றவாளி. இராவணனே ஒரு பெண்ணைத் தூக்கிச் சென்றதோடு தன்னுடைய வீரத்தை வெறும் களத்தே போட்டதோடு தன்னை ஏற்றுக் கொள்ளும்படி காலில் விழுந்து கெஞ்சி வீரத்தையே களங்கப்படுத்திய மாபெரும் குற்றத்தைச் செய்தவன். ஆனல் கோவலனே தன் மனைவிகள் இருவருக்கும் துன்பம் தந்தானே தவிர அடுத்தவன் மனைவிக்குத் துன்பம் விளைவிக்கவில்லை. ஆதலால் கோவலனை விடுவித்து மற்றவர்களுக்கு ரூ. 1000/- அபராதம் விதிக்கிறேன்.

தொகுப்பு: ''எல்லெஸ்''

இப்படியும் ஒரு அதிகாரி!

ஒரு அதிகாரி வயலுக்குப் போனார். அங்கு சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துப் புகை பிடித்தார்.

அதைப் பார்த்த விவசாயி ''என்ன எஜமான் சிகரெட்டெல்லாம் பிடிக்கிறீர்கள்?'' என்றார்.

''வேறொன்றுமில்லை. எப்போதாவது மது அருந்தினால் மட்டும் சிகரெட் பிடிப்பேன். அவ்வளவு தான்'' என்றார்.

''அப்படியானால் நீங்கள் எப்போது மது அருந்துவீர்கள்?'' என விவசாயி கேட்டார்.

''சின்ன வீட்டுக்குப் போகும் போது மட்டும் மது அருந்துவேன். அவ்வளவுதான்'' என்றார் அந்த அதிகாரி.

''ஐயா நீங்கள் எப்போது சின்னவீட்டுக்குப் போவீர்கள்?'' என்று கேட்டார் விவசாயி.

''சீட்டு விளையாடிக் கொண்டிருக்கும் போது சலிப்புத் தட்டினால் மட்டும் சின்ன வீட்டுக்குப் போவேன். அவ்வளவுதான்'' என்றார்.

ஆக அந்த அதிகாரி ஒன்றைச் சாடி மற்றொன்றைச் செய்யும் தவறுகளைக் கேட்டு விவசாயி வெட்கிப் போனார்.

— கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார்

ஃ உலகத்திலேயே கல்வி மிக முக்கியமானது மட்டுமல்ல; அதிசயமான மாற்றங்களையும் உண்டு பண்ண வல்லது.

— இங்கர்சால்

பிரான்சு நாடு சென்று திரும்பிய பள்ளி மாணவர்கள்

சென்னையில் உள்ள 'லயன்ஸ் பிரான் சைஸ்' என்ற பிரெஞ்சு அரசு கலாசார மையம் ஏற்படுத்திக் கொடுத்த பண்பாட்டுக் கலாசார மாற்றுத் திட்டத்தின் கீழ் 24 பள்ளி மாணவ, மாணவியர் பிரான்சு நாடு சென்று திரும்பினர். அந்த அரிய வாய்ப்பைப் பெற்றவர்களில் இப்படத்தில் உள்ள சிவாவும் ஒருவன். அதற்காக வைக்கப்பெற்ற பிரெஞ்சு மொழித் தேர்வில் சிவா சிறந்த மாணவனாகத் தேர்வு செய்யப் பெற்றான்.



சிவா (வயது 13) கிழச்சிவல் பட்டியைச் சேர்ந்தவன். சென்னை பத்மா சேஷாத்ரி பாலபவனம் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் பயின்று வருகிறான். இவனுடைய தந்தையார் திரு. எஸ்பி. சிங்காரம் B. E. (Chemical) பட்டதாரி. சென்னையிலும் பாண்டிச்சேரியிலும் இரசாயனத் தொழிற்சாலைகளை நடத்தி வருகிறார். தாயார் திருமதி வாசுகி சிங்காரம் B. Sc B. Ed. பட்டதாரி.

அம் மாணவ, மாணவிகள் சென்னையிலிருந்து 19—5—89 அன்று பாரிஸ் சென்று அங்கிருந்து போவே என்ற நகரில் குடும்பத்திற்கு ஒருவராக 24 குடும்பங்களில் தங்கினர். பாரிஸில் சில பள்ளிகளையும் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டனர். அங்கு வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றனர். பிரெஞ்சு மக்களின் வாழ்க்கை முறை கலை, பண்பாடு ஆகியவற்றை அவர்களுடனே தங்கி அறிந்து கொண்டனர்.

இந்தியா திரும்பியபோது எல்லோரும் மூன்று நாட்கள் இலண்டனைச் சுற்றிப் பார்த்து வந்தனர்.

சிவாவுக்குக் கிடைத்த வாய்ப்பும், அந்த வாய்ப்பைப் பெற உறுதுணையாக இருந்த சிவாவின் பெற்றோரும் பாராட்டிற்குரியவர்கள்.

ஃ எவனிடத்தில் வாய்மை, தூய்மை, தன்னலமின்மை என்னும் குணங்கள் இருக்கின்றனவோ அவனை அழிக்கும் சக்தி எங்கும் கிடையா.

— விவேகானந்தர்

நகரத்தார் இனம் பற்றி

பழ. கருப்பையா

செட்டிநாட்டு வீட்டு அமைப்பு பட்டினத்தார் பாடல்களில் உள்ளன. 1500 ஆண்டுகளாக மரபு மாருமல் நம் வீடுகளில் 'வளவு' அமைக்கப்படுகிறது.

நம்மவர்கள் வெய்யில் காலத்தில் வளவையும் மழை காலத்தில் 'ஹால்' வீட்டையும் பயன்படுத்தி வருகின்றனர். 'வளவு' போய்விட்டால் செட்டி நாட்டின் கலாசாரம் போய் விடும்.

நகரத்தார்கள் ஒரு காலத்தில் சமணர்களாக இருந்தவர்கள். 'சாத்தன்' என்பது சமணப் பெயர் தான்.

நமது இனம் சிறியது என்ருலும் ஆன்மீகத்தோடு வாழ்கிறது. பெண்ணைப் பெருமைப்படுத்துகிற சமூகம் நம் சமூகம்தான்.

நகரத்தார்கள் கோஷ்டி சேராக் கொள்கையுடையவர்கள். வீட்டில் சண்டை ஏற்பட்டால் நடுநிலை வகிப்பார்கள்,

(பட்டினத்தடிகள் திருவிழா பேரவை நிகழ்ச்சியில்)

திருப்பரங்குன்றம் நகர விடுதி : விசேடங்கள் விவரம்!

1. ஆண்டு தோறும் ஆடிக் கார்த்திகை நாளன்று பொன். புதுப்பட்டி ப. ராம. சுப. குடும்பத்தார் திருப்பரங்குன்றம் நகர விடுதியில் மஹேஸ்வர பூஜை நடத்தி வருகிருர்கள்.

2. மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக ஆண்டு தோறும் ஆவணிக் கார்த்திகை நாளன்று மதுரை நகரவிடுதியில் காவடி கட்டிப் பொங்கல் வைத்து வேலுக்கு அபிஷேகம் செய்து மறுநாள் கார்த்திகையன்று திருப்பரங்குன்றம் நகர விடுதியில் பால்குடம் காவடி செலுத்தி மஹேஸ்வர பூஜை நடைபெற்று வருகிறது.

3. ஆண்டு தோறும் தைக் கார்த்திகையன்று செம்பனூர் நா. சுப. கா. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் மஹேஸ்வர பூஜை நடத்தி வருகிருர்கள்.

4. ஆண்டு தோறும் பங்குனி உத்தரத்தன்று மேலைச்சிவபுரி அ. சுப. அண்ணுமலை செட்டியார் அவர்கள் மஹேஸ்வர பூஜை நடத்தி வருகிருர்கள்.

பாதயாத்திரையும் பாடல்களும் !

மனிதனுக்கு ஒழுக்கம் மிக அவசியமானது. ஒவ்வொருவரும் திட்டமிட்டு உழைக்க வேண்டும். தினமும் படிக்க வேண்டும். நம் முன்னேர்கள் கடைப்பிடித்த நெறிகளில் தயங்காது செல்லலாம். சைவத்தையும் தமிழையும் நம்மிரு கண்களாகப் போற்றி வளர்க்க வேண்டும். இயன்ற வரை நல்ல திருப்பணிகளில் பங்கு பெற வேண்டும். பாதயாத்திரையும் பாடல்களும் பகவானுக்கு மிகவும் பிடித்தமானவை. பாதயாத்திரை செல்லும்போது பகவான் நமக்கு முன்னே வழி காட்டிச் செல்கிருன். பாடல்களைப் பாடும்போது பகவான் நம் பின்னல் வருகிருன். ஆகவே தான் நாயன்மார்கள் போன்ற பெரியவர்கள் பாதயாத்திரையையும் பாடல்களையும் பகவானை சேர்க்கப் பயன்படுத்தினர். நம் சமூகமும் அப்பாதையில் செல்வது பாராட்டுக்குரியது.

— அரு. சோமசுந்தரன்

('காசிஸ்ரீ' திரு. அரு. சோ. பிறந்த தினச் செய்தியாக 14-8-89 அன்று காவிரிப்பூம் பட்டினத்தில் கூறியது.)

உ
சிவமயம்

ஆறும் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
10-5-1928

மறைவு :
26-9-1983

பாகனேரி திருமதி மா. மீனாட்சி ஆச்சி

எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு
இறைவனடி சேர்ந்த எங்கள் இதய தெய்வத்திற்கு
ஆறும் ஆண்டு அஞ்சலியை செலுத்துகிறோம்.

நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்

சுப. வே. மாணிக்கம் செட்டியார் - கணவர்

மக்கள் :
மா. தியாகராஜன் - மரகதம் தியாகராஜன்
மா. ராம. சுப்பிரமணியன் என்ற
கார்த்திக் (பேரன்) பிரேமா இராமகிருஷ்ணன்
வள்ளியம்மை - S. சேதுஇராமனுதன் (சிங்கப்பூர்)
காமாட்சி - உ. சப்பத்து
விஜயலெட்சுமி - M. S. முத்துராமன்
செல்லமீனுள் - SP. ரவி என்ற இராமனுதன்
மற்றும் பேரன் பேத்திகள்

மீனுட்சி அண் கோ., பைனுன்சியர்ஸ்
44-A, தெற்கு மாசி வீதி, மதுரை-625 001

ஸ்ரீ லெட்சுமி கார்ப்பொரேஷன்,
இரும்பு மொத்த வியாபாரம்
56-57, சப் ஜெயில் ரோடு, திருச்சி-620 008
தொலைபேசி எண்: 27924 & 33740
மீனுட்சி இல்லம், ராமலிங்க நகர், திருச்சி-620 003

வாழ்த்துகிறோம்

எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் 1989-90 ஆம் ஆண்டிற்கு பாளையங்கோட்டை அரிமா சங்கத் தலைவராக ஏக



மனதாகத் தேர்வு செய்யப் பெற்று திருநெல்வேலி ஓட்டல் ஸ்ரீ சீதாபதியில் 29-7-89 அன்று அரிமா 324B மாவட்ட முன்னாள் ஆளுநர் வழக்கறிஞர் எஸ். இராமசாமி அவர்களால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பெற்றார்கள்.

வேகுபட்டியைச் சேர்ந்த இவர்கள் திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து தொண்டாற்றி வருகிறார்கள். திருநெல்வேலி நடராஜா பேப்பர் மார்ட்டின் பங்குதாரர். இவர்களுக்கு நமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆர்.எம். பழநியப்பன் அவர்கள் 1989-90 ஆம் ஆண்டிற்கு பாளையங்கோட்டை அரிமா சங்கத்தின் பொருளாளராக ஏகமனதாகத் தேர்வு செய்யப்பெற்று 29-7-89 அன்று அரிமா 324B மாவட்ட முன்னாள் ஆளுநர் வழக்கறிஞர் எஸ். இராமசாமி அவர்களால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பெற்றார்கள்.



பொன். புதுப்பட்டியைச் சேர்ந்த இவர்கள் திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் செயலாளராகத் தொண்டாற்றி வருகிறார்கள். திருநெல்வேலி பழநியப்பா பிரிண்டர்ஸின் உரிமையாளர். இவர்களுக்கு நமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


மணமகள் தேவை

மாத்தூர்க் கோயில் கருப்பூர் பிரிவைச் சேர்ந்த தொழிலில் பங்குதாரராக உள்ளவருக்கு மறுமணம் செய்துகொள்ள படித்த, அழகிய, குணமுள்ள பெண் தேவை, விருப்பமுள்ளவர்கள் புகைப்படம், ஜாதகத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும் :

பெட்டி எண் : 141
C/o. ''நகரத்தார் குரல்''
25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001.

முத்தையாச் செட்டியார் சிலைத் திறப்பு விழா!

மதுரை ராஜா முத்தையா மன்ற வளாகத்தில் நிறுவப் பெற்றுள்ள டாக்டர் ராஜா சர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்களது முழு உருவச் சிலையை 12-8-89 மாலை தமிழக முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்துச் சிறப்புரை யாற்றினர்கள்.



ராஜா சர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்களின் சிலைத் திறப்பு விழாவில் (இடமிருந்து வலமாக) திரு. எஸ். எஸ். தென்னரசு, திரு. என். மாணிக்கம் செட்டியார், அமைச்சர்கள் மாண்புமிகு ஆற்காடு வீராச்சாமி, க. அன்பழகன், முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதி, டாக்டர் திரு. எம். ஏ. எம். இராமசாமி, திரு. முரசொலிமாறன், அமைச்சர் மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் ஆகியோர்

விழாவிற்குக் கல்வி அமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள் தலைமை வகிக்க அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தரும் தமிழ் இசைச் சங்கத்தின் துணைத் தலைவருமான டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களும் ஆட்சிக் குழு உறுப்பினரான எஸ். எஸ். தென்னரசு அவர்களும் வரவேற்றுப் பேசினார்கள். செய்தி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் திருவிளக்கேற்றி வைத்து விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

விழாத் தொடக்கத்தில் டாக்டர் சீர்காழி சிவ. சிதம்பரம் இறை வணக்கம் பாடினார். திரு. எம். பி. என். சேதுராமன்- திரு. எம். பி. என். பொன்னுசாமி சகோதரர்கள் நாதஸ்வரம் வாசித்தனர்.

சிலைத் திறப்பு விழாவில் அமைச்சர்கள் திரு. ஆற்காடு வீராச்சாமி, திரு. துரைமுருகன் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் திரு. முரசொலிமாறன் திரு. வை. கோபால்சாமி, திரு. டி. ஆர். பாலு, திரு. தா. கிருஷ்ணன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரிஅனந்தன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவராஜ், டி. ஐ. ஜி. திரு. செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பரங்குன்றத்திற்குப் பால் குடம், காவடி

ஆவணிக் கார்த்திகையை முன்னிட்டு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக ஏழாவது ஆண்டாக 23-8-89 அன்று மதுரை நகர விடுதியில் 6 காவடிகள் கட்டப் பெற்றன. கொ. லெட்சுமிபுரம் 'இரசிகமணி' ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் விநாயகப்பானை வைத்தார்கள். ஒக்கூர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள் வேலுக்கு அபிஷேகம் செய்தார்கள்.

தேவகோட்டை பாத யாத்திரைக் குழு அன்பர்கள் திருவாளர்கள் கே என் சொக்கலிங்கம், என். காசிநாதன், வயிரவன் ஆகியோர் பக்திப் பாடல்களைப் பாடினார்கள். விநாயகப்பானை, வேல் அபிஷேகம் ஆகியவற்றில் கலந்து கொண்டவர்களுக்கும் இந்த விசேடத்திற்குத் தேவையான பொருட்களை அன்பளிப்பாக வாங்கிக் கொடுத்தவர்களுக்கும் பொன்னாடைகள் போர்த்தப் பெற்றன. இரவு நகர விடுதியில் தேவகோட்டை வெ. நா. மு. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமது செலவில் எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கினார்கள்.

மறுநாள் 24-8-89 காலை 8-30 மணிக்கு 14 பால் குடங்கள் கட்டப் பெற்று 6 காவடிகளுடன் பாதயாத்திரையாகச் சென்று திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியர் ஆண்டவர் சன்னதியில் செலுத்தப் பெற்றன. ஆர்எம். என். கோவிந்தன் செட்டியார் அவர்கள் வேல் எடுத்துச் சென்றார்கள். பின்னர் திருப்பரங்குன்றம் நகர விடுதியில் மகேஸ்வர பூஜை நடைபெற்றது. ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப் பெற்றது. அன்று மாலை திருபபரங்குன்றம் நகர விடுதியில் 16 மங்கலப் பொருட்கள் ஏலம் விடப் பெற்றன. திரு. கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார் ஏலம் கூவ, ஆர்எம். முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்கள் ஏலம் எடுத்தவர்களுக்குப் பொருட்களை வழங்கினார்கள்.

இரு நாட்களிலும் எல்லா நிகழ்ச்சிகளிலும் நகரத்தார் பெருமக்களும் ஆச்சிமார்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காவடி அமைப்பாளர் தேவ கோட்டை லெ. மு. மு. முத்து மாணிக்கம் செட்டியார் அவர்கள் இரு நாட்களிலும் துணையாக யாக இருந்து விழா சிறப்புற நடக்க உதவினுர்கள். அவர் களின் தொண்டு பாராட்டுக் குரியது.

சங்கச் செயலாளர் பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் விழாவில் கலந்து கொண்டு காவடி, பால்குட நிகழ்ச்சியில் நகரத்தார்கள் காட்டும் ஈடு பாட்டைப் பாராட்டிப் பேசினுர் கள்.

திருமணம்

நாச்சியாபுரம் கண. நா. மாணிக்கம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மீனுட்சி என்ற மல்லிகாவிற்கும் நேமத் தான்பட்டி கு. அ. முத்துக்கருப் பன் செட்டியார் அவர்கள் புதல் வன் செல்வன் முத்துக்கருப்பன் **B. Sc.** க்கும் நாச்சியாபுரத்தில் 20-8-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழா

தேவகோட்டை திரு. ஓ. எம். எஸ்பி. எல். ஏஎல். அழகப்ப செட்டியார்-திருமதி லெட்சுமி ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 25-8-89 அன்று தேவகோட்டை கண்ட தேவி சாலையில் உள்ள அவர் களது இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது.

செய்திகள்

ஃ மதுரை தெற்கு வெளி வீதியில் உள்ள ஸ்ரீ குட்டைய சுவாமிகள் மடாலயத்தில் தேவகோட் டை ஸ்ரீலஸ்ரீ குட்டைய ஞான தேசிக சுவாமிகள் அதிஷ்டானத் திற்கும் மற்றுமுள்ள அதிஷ் டானங்களுக்கும் ஆவணி மீ 30 உ (15-9-89) வெள்ளிக் கிழமை காலை மணி 6க்கு மேல் 7 மணிக்குள் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற உள் ளது.

ஃ நகரத்தார் பெண்கள் குரு பீடமான துலாவூரில் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகளின் குரு பூஜை 15-10-89 ஞாயிறு அன்று நிகழ இருக்கிறது.

ஃ நவராத்திரி விழா 30-9-89 தொடங்கி 9 நாட்கள் நாடெங் கும் கொண்டாடப் பெற இருக்கிறது.

ஃ நடராஜபுரம் திரு. முரு. ராம. ராம. முருகப்ப செட்டி யார் - திருமதி மீனுட்சி ஆச்சி யின் மணி விழாவையொட்டி 22-8-89 அன்று நாட்டார், கிராமத்தார் பள்ளிக் குழந்தை கள் சுமார் 500பேருக்கு நடராஜ புரத்தில் மதிய உணவு வழங்கப் பெற்றது.

ஃ சோழபுரம் அருள்மிகு அருள் மொழி நாதர் அறம் வளர்த் தாள் ஆலயத்தின் குடநீராட்டு விழா 10-9-89 ஞாயிறன்று காலை 5-30 முதல் 6-00 க்குள் நடைபெற உள்ளது.

இயற்கை எய்தினுர்

பாகனேரி சுப. வே. மாணிக் கம் செட்டியார் அவர்களின் புதல்வன் திரு. இராமகிருஷ் ணன் தனது 30 ஆவது வயதில் 15-7-89 அன்று குற்றாலத்தில் இயற்கை எய்தினுர். இவருக்கு ஒரு புதல்வனும் ஒரு புதல்வியும் உள்ளனர்.

ஃ ஃ ஃ

வெற்றியூர் மு. கதி. கதிரேசன் செட்டியார் அவர்கள் மனைவி திருமதி உமையாள் ஆச்சி தமது 81 ஆவது வயதில் 14-8-89 அன்று இயற்கை எய்தி னுர்கள்.

விரையாச்சிலையும் சிவன் கோயிலும்!

'சிவன் கோயில் இல்லாத நகரத்தார் ஊர்கள்' என்ற தலைப்பில் சென்ற இதழில் 8 ஊர்களை வெளியிட்டிருந்தீர்கள். அதில் எங்கள் ஊரான விரையாச்சிலையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

விரையாச்சிலையில் பழமையான சிவன் கோயில் உள்ளது. இது ஆ. ராம. குடும்பத்தினரால் திருப்பணி செய்யப் பெற்றது. இக்கோயிலில் வீதிவிடங்கேசுவரரும் உய்யவந்த நாயகியும் இருந்து அருள் பாலித்து வருகின்றனர். இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடநீராட்டு நடத்த நகரத்தார்கள் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மெ. சிதம்பரம்

மதுரை.

(இதுபோல் பலரும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி.)

நகரத்தார் புத்தக வங்கி

இந்த ஆண்டு கல்லூரிகளில் சேர்ந்துள்ள நகரத்தார் மாணவர்கள் நகரத்தார் புத்தக வங்கியில் சேர்ந்து புத்தகங்கள் பெறலாம் என்றும்—

புத்தக வங்கி ஆகஸ்ட் '89 முதல் ஒவ்வொரு ஆங்கில மாதமும் இரண்டாவது சனிக்கிழமைகளில் மதுரை நகர விடுதியில் காலை 11 மணி முதல் பகல் 1 மணி வரை செயல்படும் என்றும்—

அக்டோபர்' 89ல் ஆசிரியர், மாணவர் கையேடு ஒன்று வெளியிட இருப்பதாகவும் மதுரையில் உள்ள ஆசிரியர்களும் கல்லூரி மாணவர்களும் தங்களது முகவரி, பணியாற்றும் அல்லது கல்வி கற்றுவரும் கல்லூரி மற்றும் முழு விவரங்களுடன் உடனடியாக எழுதியனுப்பிவைக்குமாறும்—

நகரத்தார் புத்தக வங்கியின் தலைவர் திரு. பழ. இராமசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்

Regd No TN/MA/(C)106 NAGARATHAR KURAL